வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 04 16.02.2023 வியாழக்கிழமை இதழ் : 69 பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# 66 வீதம் உயர்கிறது மின்சார கட்டணம்!

கொழும்பு, பெப்ரவரி 16

**நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மின்சார கட்டணம் 66 வீதத்தால் அதிகரிக்கப்படுகிறது என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.**

அத்துடன், இந்த மின் கட்டண உயரவுக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தவிர, ஏனைய மூன்று உறுப்பினர்களும் அனுமதியளித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை மின்சார சபை 28 ஆயிரத்து 700 கோடி ரூபாய் வருமானத்தை ஈட்டும் வகையில் மின்சார கட் டணத்தை 66 வீதத்தால் அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. 15

## தபால் மூல வாக்களிப்பு திட்டமிட்டபடி நடக்கும்!

### தேர்தல் ஆணைக்குழு தலைவர்



கொழும்பு, பெப். 16

திட்டமிட்டபடி 22, 23, 24ஆம் திகதிகளில் தபால்மூல வாக்களிப்பு நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அத்துடன், தபால் மூல வாக்களிப்பு திகதி பிற்போடப்பட்டுள்ளதாக ஊடகங்கள் மூலம் பரப்பப்படும் பிரசாரம் முற்றிலும் பொய்யானது. தபால் மூல வாக்குச் சீட்டுகளை விநியோகிக்கும் திகதி மாத்திரமே தாமதமாகியுள்ளது.

தபால் மூல வாக்களிப்பு ஒத்திவைக்கப்பட்டதாக ஆணைக்குழுவில் எவரும் அறிவிக்கவில்லை எனவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## 4 பொலிஸாருக்கு மரண தண்டனை!

கொழும்பு, பெப். 16

நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மரண தண்டனை தீர்ப்பு நேற்று புதன்கிழமை அளிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் வரலாற்றில் நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு ஒரே தடவையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

அம்பாந்தோட்டையில் கடந்த 2005ஆம் ஆண்டு ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கிலேயே 15

## மின் கட்டண உயர்வை அமுல்படுத்த முடியாது!

### பொதுப் பயன்பாடு ஆணைக்குழு தலைவர்

கொழும்பு, பெப். 16

மின்சார கட்டணத்தை இலங்கை மின்சார சபை நடைமுறைப்படுத்த முடியாது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க ஊடகங்களுக்கு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

மின்சார கட்டண உயர்த்த இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் ஜனவரி 5ஆம் திகதி அனுமதி கோரியது.

ஆணைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆணையத்தின் முன்மொழிவை 15

## பாதுகாப்பு தொடர்பான பேச்சு; அமெரிக்க உயர் குழு வந்தது!

கொழும்பு, பெப். 16

பாதுகாப்பு தொடர்பான பேச்சுகளில் ஈடுபடுவதற்காக 20 பேர் கொண்ட அமெரிக்க குழு இலங்கை வந்துள்ளது.

இந்தக் குழு நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு விமான நிலையத்துக்கு தனி விமானத்தில் வந்து இறங்கியது என்று அறிய வருகிறது. இவர்களின் வருகையை ஒட்டி கடந்த சில நாட்களாக கொழும்பு விமான நிலையத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இலங்கை வந்துள்ள குழுவில் இந்தோ - பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான முதன்மை துணை பாதுகாப்பு செயலாளர் ஜெடிடியா றோயலும் இடம்பெற்றுள்ளார்.

நாட்டின் அரச மற்றும் பாதுகாப்பு உயர் மட்டத்தினருடன் இந்தக் குழு பேச்சுகளில் ஈடுபடும் என்றும் அறியக் கிடைக்கின்றது. (ஐ)

# வடக்கிலிருந்து இந்தியாவுக்கு மின்சார விநியோகத் திட்டம்!


### இரு மாதங்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்தாகும்

புதுடில்லி, பெப். 16

வடக்கு மாகாணத்தில் இருந்து மின்சாரத்தை தென்னிந்தியாவுக்கு வழங்கும் திட்டம் ஒன்றை செயல்படுத்த இலங்கை நம்பிக்கை கொண்டுள்ளது. இது தொடர்பான இலங்கை - இந்தியா வர்த்தக புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு மாதங்களுக்குள் கைச்சாத்திடப்படும் என்று இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

இந்தியா - இலங்கை இடையே மின்சார கட்டமைப்புகளை ஒன்றிணைக்கும் உடன்படிக்கையை எற்படுத்திய பின்னர் செயலாக்க ஆய்வுகள் முனெடுக்கப்படவுள்ளன.

10 வருடங்களுக்கு முன்னதாக முன்மொழியப்பட்ட இந்த திட்டம் இதுவரை சிறிய அளவிலான முன்னேற்றத்தையே எட்டியிருந்தது. இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குள் மின் கட்டமைப்பை உருவாக்கி, இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை 15



## பலரும் பார்த்திருக்க மனைவியை குத்திக்கொன்ற இலங்கை தமிழர்!

### சுவிற்சர்லாந்தில் நேற்று சம்பவம்

சூரிச்,பெப்.16

சுவிற்சர்லாந்தில் சிற்றுண்டிக் கூடத்தில் இலங்கை தமிழ் தம்பதியரிடையே ஏற்பட்ட தகராறு கொலையில் முடிந்தது. இதில், பலரும் பார்த்திருக்க தனது மனைவியை கணவன் குத்திக் கொன்றார்.

சுவிற்சர்லாந்தின் ஆர்கெவ், கான்டன்ரப்பர்ஸ்வில் பகுதியிலுள்ள “பெர்னர்ஸ் 15

## மீளவும் ஜனாதிபதியாகவே ரணில் தேர்தலை ஒத்திவைக்கின்றார்!

### சிறீதரன் எம். பி.

யாழ்ப்பாணம், பெப். 16

மக்களின் ஆணையுடன் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற எண்ணத்திலேயே ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஒத்திவைக்க முயற்சிக்கிறார் என்று தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு பிரதேச சபைக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதன்போதே 15

## எதிர்கால பொருளாதார திட்டத்தை ஐ. எம். எவ்விடம் சமர்ப்பித்துள்ளோம்!

### ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, பெப். 16

நாட்டின் எதிர்காலத்துக்காக தயாரிக்கப்பட்டுள்ள பொருளாதார வேலைத்திட்டத்தை சர்வதேச நாணய நிதியத்திடமும் சமர்ப்பித்துள்ளோம். சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்ற போதிலும் , அதன் சகல நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் 15

## சலுகைகள் குறித்து தெரிவிக்காமல் ஆதரவு அளிப்பதாக சீனா அறிவிப்பு

பீஜிங், பெப். 16

வறிய நாடுகளுக்கு கடன்வழங்கியவர்களின் மாநாட்டுக்கு முன்னதாக இலங்கைக்கு சீனா ஆதரவை வெளியிட்டுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை இந்த மாநாடு நடைபெறவுள்ள சூழலிலேயே சீனா தனது ஆதரவை வெளியிட்டுள்ளது.

எனினும் இலங்கையை பெரும் பொருளாதார அரசியல் நிதி நெருக்கடிக்குள் தள்ளியுள்ள பல கோடி டொலர் கடன் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளது என்பது குறித்து சீனா எதனையும் தெரிவிக்கவில்லை.

இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான சாதகமான பங்களிப்பை வழங்குவதற்காக சீனா உரிய நாடுகள் மற்றும் நிதியமைப்புகளுடன் இணைந்து செயல்படும் என சீனாவின் வெளி 15

# இப்படியும் நடக்கிறது...!

உள்ளூராட்சி தேர்தல் குறிப்பிட்ட தினத்தில் நடைபெற மாட்டாது என்பது இப்போது ஓரளவுக்கு ஊர்ஜிதமாகி வருகின்றது.

தபால்மூல வாக்களிப்பு இப்போது கலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

காரணம் எல்லோரும் எதிர்பார்த்ததுபோன்றதுதான். தேர்தல் நடத்துவதற்கான செலவினங்களுக்கு தேவையான பணத்தை தயார் செய்யாமலேயே தேர்தலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதே சில பொருளியலாளர்கள் தேர்தல் நடைபெறாது என்று எதிர்வு கூறியிருந்தனர்.

இன்னும் சிலரோ தேர்தலுக்காக பணம் செலவிடப்படுமானால் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படலாம் என்றும் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

ஆனாலும் தேர்தலை நடத்தியே தீருவது என்று தேர்தல்கள் ஆணைக்குழு அதிலும் அதன் தலைவர் மிகத்தீவிரமாக இருக்கிறார்.

எதிர்வரும் இருபத்திரண்டாம் திகதி உள்ளூராட்சி தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நடைபெற வேண்டும். அப்படி நடப்பதானால், அதற்கான வாக்குச்சீட்டுக்கள் தயாராகி இப்போது தபாலில் அனைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கவேண்டும்.

ஆனால், அவை இதுவரை அனுப்பப்படவில்லை. அதனால் திட்டமிட்டவாறு தபால்மூல வாக்களிப்பு குறிப்பிட்ட தினத்தில் நடக்காது என்று தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டது.

அரச அச்சக திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட அச்சிடும் பணியை முற்பணம் செலுத்தினால் மாத்திரமே தங்களால் அச்சிடமுடியும் என்று அச்சக திணைக்களம் கைவிரித்துவிட்டது.

அரச அச்சகம் என்பது அரசாங்கத்தால் நடத்தப்படும் ஒரு வர்த்தக நிறுவனம்தான். அங்கே யார் எதனை அச்சிடுவதென்றாலும் அதற்கான பணத்தை செலுத்தினால் மாத்திரமே அச்சிடமுடியும். அவர்களிடம் போதுமான நிதி இருந்தால் அச்சிட்டுக் கொடுத்துவிட்டு பின்னர் அதற்கான பணத்தை பெற்றுக் கொள்ளலாம்தான். ஆனால், இன்று அநேகமாக எல்லா அரச நிறுவனங்களுமே நிதிநெருக்கடியில் இயங்குபவைதான். பல கோடி ரூபாய்களை செலவிட்டு அதற்கு தேவையான காகிதங்களை கொள்வனவு செய்தால் மாத்திரமே அவர்களால் அச்சிடமுடியும் என்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

தேர்தல் நடத்துவதற்கு வசதியாக முதல்கட்டமாக இருநூற்றி முப்பது மில்லியன் ரூபாயை தேர்தல் திணைக்களம் திறைசேரியிடம் கோரியிருந்த போதிலும் பத்து மில்லியன் ரூபாயையே திறைசேரி முதல் கட்டமாக வழங்கியிருக்கின்றது.

தேர்தல் நடத்துவதற்கு வசதியாக நிதியை ஒதுக்காவிட்டால் நீதிமன்றத்தை நாடப்போவதாக ஆணையாளர் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அவர் ஒரு ஜனாதிபதி சட்டத்தரணி. அவருக்குத் தெரிந்தது வழக்குப்போடுவதுதான் என்பது தெரிந்ததே.

ஆனால், நாடு இன்று எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளியே வருவதற்காகப் பல்வேறு கட்டுப்பாடுகளை அரசாங்கம் செய்து வருகின்றது. அரச திணைக்களங்களின் செலவினங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், அநாவசிய செலவுகளைக் குறைக்குமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டு வருகின்றது.

முன்னரைப்போல தேவையான வேளைகளில் எல்லாம் புதிது புதிதாக பணத்தை அச்சிடுவதை கட்டாயமாக நிறுத்த வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் கடும் நிபந்தனை விதித்துள்ள நிலையில், அன்றாட செலவினங்களுக்கே அரசு திக்குமுக்காடி வருகின்றது. அரச பணியாளர்களின் சம்பளமே இரண்டு தடவையாக வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், தேர்தல்களை நடத்தவேண்டும் என்றால், சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் ஒன்றாக சந்தித்து இதனை எப்படி எதிர்கொள்வது என்று பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டுமே தவிர, ஒவ்வொருவரும் தத்தம் அதிகாரங்களை மாத்திரம் பலப்பரீட்சை செய்துகொண்டிருப்பதால் எந்தப்பயனும் ஏற்படுத்திவிடப்போவதில்லை.

இந்துக் கோவில் ஒன்றை அடாத்தாக தொல்பொருள் திணைக்களமோ அல்லது வேறு எவருமோ ஆக்கிரமிக்க முயல்கின்றபோது அதனை அரசியல் ரீதியாக நிரந்தரமாக தடுத்து நிறுத்த முயற்சிக்கவேண்டுமே தவிர, நீதிமன்றம் மூலமாக அதனை தடுக்க முயற்சித்தால் அது சிலவேளை நமக்கு பாதகமாகவும் முடிந்துவிடலாம்.

அதுபோலத்தான், இங்கே எடுத்ததெற்கெல்லாம் நீதிமன்றங்களையே நாட முயன்றால், அது எல்லா நேரங்களிலும் நமது பிரச்னைக்கு தீர்வாக ஆகிவிடாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும்.

உள்ளூராட்சி தேர்தல் நிச்சயம் நடத்தப்படவேண்டியதுதான். அதற்காக மல்லுக்கட்டுவதை தவிர்த்து சம்பந்தப்பட்ட தரப்பினர் கூடிப்பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

- ஊர்க்குருவி

# ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கும்வரை தேர்தல் நடைபெறாது!

## திலங்க சுமதிபால



கொழும்பு, பெப். 16

பணம் இல்லை என தெரிவித்து உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிற்போடப்பட்டால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கும் வரைக்கும் எந்த தேர்தலும் நடைபெறாது. அதனால், மக்களின் ஜனநாயக உரிமையை பறிப்பதற்கு யாருக்கும் இடமளிக்கக்கூடாது என சுதந்திர மக்கள் கூட்டணியின் செயலாளர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெறுமா இல்லையா என்ற சந்தேகம் எழுந்திருப்பது தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடுவதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. என்றாலும் எதுவும் கைகூடவில்லை. தற்போது தேர்தல் செலவுக்கு பணம் வழங்குவதற்கு பணம் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த காரணத்தை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் பிற்போடப்பட்டால் ஜனாதிபதி தேர்தலோ, பாராளுமன்ற தேர்தலோ இடம்பெறாது. தேர்தல் நடத்துவதற்கு பணம் இல்லை என தேர்தல் நடத்துவதற்கு பொறுப்பான நிறுவனம் தெரிவிப்பதாக இருந்தால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கும் வரைக்கும் எந்தத் தேர்தலும் இடம்பெறாது.

அதனால், மக்களின் ஜனநாயக உரிமையான வாக்களிக்கும் உரிமையை பறிப்பதற்கு யாருக்கும் இடமளிக்க முடியாது. அத்துடன், உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு தேவையான அனைத்து கடதாசிகளும் தற்போது போதுமான அளவு இருப்பதாகவும் தேர்தலுக்கு தேவையான பத்திரங்கள் இதுவரைக்கும் அதிகமான மாவட்டங்களுக்கு அச்சிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

7 மாவட்டங்களுக்கு தேவையான தபால் வாக்குச்சீட்டுக்கள் அச்சிடப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சக பிரதானி தெரிவித்திருக்கிறார். எனவே, பணம் இல்லை என்ற காரணத்துக்காக உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கத்துக்கு இட மளிக்கக்கூடாது. தேர்தல் ஆணைக்குழு இது தொடர்பாக சட்ட ரீதியில் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ஐ)

# திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி ஏற்பாடுகள் தொடர்பில் ஆராய்வு!

மன்னார், பெப். 16

வரலாற்று சிறப்புமிக்கதும் பாடல் பெற்ற தலமுமான திருக்கேதீஸ்வரத்தில் எதிர்வரும் நாளை மறுதினம் சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படும் சிவராத்திரி விரத தினத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, பக்தர்கள் நீராடும் பாலாவி குளத்தில் முதலைகள் இருக்கலாம் என்ற அச்சம் காணப்படுவதால் இந்தக் குளத்தை பரிசோதனை செய்து, பக்தர்கள் அச்சமின்றி நீராட வழிவகுக்குமாறு வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சிவராத்திரி தினத்தன்று திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நடைபெறவுள்ள நிகழ்வுகள் தொடர்பில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. அ. ஸ்ரான்லி டிமெல் தலைமையில் திருக்கேதீஸ்வர ஆலய மண்டபத்தில் நேற்று முன்தினம் கூட்டம் நடத்தப்பட்டது.

இதில், திருக்கேதீஸ்வர ஆலய செயலாளர் எஸ். எஸ். இராமகிருஷ்ணன் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டனர். கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து ஏழு வருடங்களாக இந்த ஆலயத்தில் புனருத்தாரண வேலைகள் இடம்பெற்று வந்தமையால் இந்த கோவிலில் பாலாலயம் அமைத்து, சுவாமிகள் வழிபட்டு வந்த நிலையிலேயே இம்முறை சிவராத்திரி விழா இடம்பெறவுள்ளது.

இதனால் இந்த வருடம் வடக்கு பகுதியில் மட்டுமல்ல, இலங்கையின் நாலா பக்கங்களிலிருந்தும் திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு சுமார் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் வருகை தரவிருப்பதாக எதிர்பார்க்கப்பட்ட நிலையிலேயே முன்னாயத்த ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் மாந்தை சந்தியிலிருந்து திருக்கேதீஸ்வரம் ஆலயம் வரை செல்லும் பிரதான வீதி சீரற்று காணப்படுவதால் அரசாங்க அதிபர் வட மாகாண ஆளுநருடன் தொடர்புகொண்டதைத் தொடர்ந்து அவ்வீதி விசேட நிதியுதவி மூலம் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போக்குவரத்து, சுகாதாரம், அன்னதானம், தாகசாந்தி நிலையம், குடிநீர் போன்ற முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டதுடன், அவை சார்ந்த திணைக்களங்கள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நாளை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை ஆலய சூழலில் உள்ள நான்கு மடங்களிலும் அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 16

புத்தூர் மேற்கு கலைமதி ஆலடி முருகன் ஆலய மகா கும்பிஷேக பெருவிழாவை ஒட்டி தொடர் சொற்பொழிவு நடைபெற்று வருகின்றது.

இதில், இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில், இளம் சைவப்புலவர் த. மனோஜ்குமார் "ஞானந்தாள் உருவாகிய நாயகன்" என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார். (ஐ)

# இந்திய வீசா மையத்துக்கு மறுஅறிவிப்பு வரை பூட்டு!

கொழும்பு, பெப். 16

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் வீசா விண்ணப்ப மையம் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் நேற்று அறிவித்தது.

நேற்று முன்தினம் இரவு பதிவான "பாதுகாப்பு சம்பவம்" காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உயர்ஸ்தானிகரகம் அறிக்கையிட்டுள்ளது.

அத்துடன், அனைத்து விண்ணப்பதாரர்களும் ஐ.வி. எஸ். பிறைவேட் லிமிட்டெட் நிறுவனத்தில் மேற்கொண்ட தமது முன்பதிவுகளை மீள்பதிவு செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

வீசா விண்ணப்பதாரர்கள் ஏதேனும் அவசர தூதரகம் சார் அல்லது வீசா விடயத்துக்கு உயர் ஸ்தானிகராலயத்தை தொடர்பு கொள்ளுமாறும் அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
16.02.2023 வியாழக்கிழமை
பிலவ வருடம், மாசி 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# நாடு இன்னும் கையறுநிலையில்தான்?

உள்ளூராட்சி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டு, தபால் மூல வாக்கெடுப்பிற்கான திகதியும் அறிவிக்கபட்டிருந்த நிலையில் மீளவும் தேர்தல் தொடர்பில் குழப்ப நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. நிதியின்மையால் வாக்குச்சீட்டு அச்சடிக்கும் பணிகளை இடைநிறுத்தியிருப்பதாக அரசாங்க அச்சக திணைக்களம் அறிவித்திருக்கின்றது. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டாலும் தேர்தல் நடைபெறுமா என்பதில் ஆரம்பத்திலிருந்தே சந்தேகங்கள் இருந்தன. இந்த நிலையில் தேர்தல் தொடர்பில் மீளவும் பலமான சந்தேகம் ஏற்பட்டுள்ளது. உண்மையில் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளக்கூடிய நிலையில் நாடு இல்லை. ஆனாலும், தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்ற நிலையில் தேர்தலை தடுக்கும் முயற்சியில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபடவில்லை. ஆனால், நடைமுறை பிரச்னைகளால் தேர்தல் முயற்சிகள் தொடர்ந்தும் இழுபறியிலேயே இருந்துவந்தது. இதேவேளை தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னரும்கூட, உள்ளூராட்சி மன்றங்கள் இன்னும் கலைகக்கப்படவில்லை. அதிகாரத்தில் இருப்பவர்களே தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுகின்றனர்.

சமாளித்து நிர்வகிக்கப்படும் ஒரு நாடாகவே இலங்கை இப்போதும் இருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்க எவ்வாறான கதைகளை கூறினாலும் கூட, நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான நம்பிக்கையான சூழல் இன்னும் ஏற்படவில்லை. சீனாவின் கடன் மறுசீரமைப்பு விவகாரம் முற்றுப்பெறாமையால் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியை பெறுவதில் தொடர்ந்தும் இழுபறிகளே நிலவுகின்றன. சீனாவின் உறுதி மொழி போதாது என்பதே நாணய நிதியத்தின் நிலைப்பாடாக இருக்கின்றது. இந்த நிலையில் நாட்டை எவ்வாறு முன்னோக்கி கொண்டு செல்வது? 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக வீதிகளில் சத்தம் போடுபவர்களால் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது.

ஒருவேளை, ரணில் விக்கிரமசிங்க திடீரென்று தான் வெளியேறப் போகிறாரெனவும் நாட்டை எவரேனும் பொறுப்பெடுங்களென்று கூறினால் பொறுப்பெடுக்க எவருமில்லை. அந்தளவுக்கே நிலைமைகள் காணப்படுகின்றன. ஆனால், இவ்வாறான அரசியல் கையறுநிலையில்கூட, சிங்கள தேசியவாத சண்டித்தனம் குறையவில்லை. நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான அர்ப்பணிப்பு பற்றி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கையான சொற்களை பயன்படுத்தினால்கூட, உண்மையில் ரணிலிடம் எந்தவொரு திட்டமும் இருப்பதாக தெரியவில்லை.

நாடு கையறு நிலையில் இருக்கின்றபோது, வடக்கு அபிவிருத்தி பற்றி ரணில் பேசிக் கொண்டிருக்கின்றார். நிலைமைகளை அவதானிக்கும் போது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னால் இரண்டு பிரதான சவால்கள் உண்டு. ஒன்று, அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவது. இரண்டாவது, சமவேளையில் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவது. இந்த இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன. ஆனால், இந்த இரண்டிலும் முன்னகரக்கூடிய சூழல் நாட்டில் இல்லை.

இதற்கிடையில் ஆட்சி மாற்றம் தொடர்பான சிந்தனைகளும் எட்டிப் பார்க்கின்றன. ஆனால், ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டாலும்கூட, நிலைமைகளில் உடனடியாக முன்னேற்றங்களை மக்கள் காண முடியாது. ஏனெனில், அந்தளவிற்கு நாடு சிக்கலானதோர் அரசியல் சூழலுக்குள் சிக்கியிருக்கின்றது. ஒருவேளை ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும்கூட, பல தரப்புகளின் கூட்டணி அரசாங்கமே அது இருக்க முடியும். ஒவ்வொருவரும் ஒரு பக்கமாக இழுக்கவே முற்படுவர். அதேவேளை மொட்டு - ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டணியில் ஓர் அரசாங்கம் இடம்பெற்றால்கூட, எதிர்பார்க்கும் முன்னேற்றங்கள் ஏற்படப் போவதில்லை. மொத்தத்தில் நாட்டை கையறு நிலையிலிருந்து மீட்பது மிகவும் சிக்கலானதொரு சவாலாகவே தென்படுகின்றது.

தென்னிலங்கையின் கையறு நிலைமை எந்தளவிற்கு அரசியல் மாற்றமொன்றிற்கு வழிவகுக்கும்? வழிவகுக்குமா? இந்தக் கேள்விகள்தான் தமிழ் மக்கள் முன்னால் இருக்கின்றது. ஆனால், இவ்வாறானதொரு நெருக்கடியான சூழலில் - ஒரு வகையில் நாடு எரிமலையின் மீது அமர்ந்திருப்பதான நிலைமையில்கூட, சிங்கள- பௌத்த சண்டித்தனங்களில் மாற்றமில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால் நாடு முன்னோக்கி நகர்வதற்கான சாதகமான சூழலை காணமுடியவில்லை.

# தேர்தலுக்கு பாதிப்பேற்படுத்தும் அவசியம் எனக்குக் கிடையாது!

## அரச அச்சக திணைக்கள தலைவர்

கொழும்பு, பெப். 16

அச்சக பணிகளுக்கு நிதி வழங்காமல் வாக்குச்சீட்டு அச்சிடும் பணியை தொடர முடியாது. நிதி வழங்கினாலும் வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளை நிறைவு செய்ய மூன்று அல்லது நான்கு நாட்கள் தேவைப்படும். தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்த வேண்டிய தேவை எனக்கு இல்லை. அரசியல் களத்தில் குறிப்பிடப்படும் விடயங்கள் நிராகரிக்கத்தக்கன என்று அரச அச்சகத் திணைக்கள தலைவர் கங்காலி லியனகே தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு அச்சிடல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்புக்கான வாக்குச்சீட்டு அச்சிடலுக்கு 40 கோடி ரூபாய் செலவாகும் நிலையில் தேர்தல்கள் ஆணைக் குழு நான்கு கோடி ரூபாயை மாத்திரம் அரச அச்சக திணைக்களத்துக்கு வழங்கியுள்ளது.

மிகுதி 36 கோடி ரூபாயை வழங்காவிட்டால் வாக்குச் சீட்டு அச்சிடல் பணிகளை தொடர முடியாது தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடந்த திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்தோம். அச்சிடும் பணிகளுக்கு நிதி வழங்காமல் வாக்குச்சீட்டு அச்சிடும் பணியை தொடர முடியாது. தற்போதைய நிலையில் நிதி வழங்கினால் வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளை நிறைவு செய்ய மூன்று அல்லது நான்கு நாட்களேனும் தேவைப்படும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்த வேண்டிய தேவை எனக்கு கிடையாது. நிதி வழங்காத பட்சத்தில் அச்சக பணிகளை தொடர்ந்தால் பின்னர் தோன்றும் பிரச்னைகளுக்கு யார் பொறுப்பு கூறுவது? ஆகவே, நிதி வழங்கல் தொடர்பில் எவரும் உத்தரவாதம் வழங்காதபட்சத்தில் எம்மால் தன்னிச்சையாக செயல்பட முடியாது ஆகவே அரசியல் மட்டத்தில் என்னை தொடர்புபடுத்தி குறிப்பிடப்படும் விடயங்கள் நிராகரிக்கத்தக்கவை - என்றார்.

(ஐ)

### காரைநகர் சிவன் திருவெம்பாவை விவகாரம்:

# வீட்டை எரிக்க முயற்சி முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், பெப். 16

காரைநகர் ஈழத்து சிதம்பரத்தின் திருவெம்பாவை உற்சவத்தை நடத்துமாறு கோரி அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், வீட்டை எரிக்க முயன்றனர் என்று கூறி அந்த ஆலயத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேலும், ஆலயத்தில் பாலஸ்தாபனம் செய்து திருவெம்பாவை நிகழ்வை நடத்தாமல் இருப் பதற்கு ஆலய நிர்வாகத்தினர் திட்டமிட்டிருந்தனர். இது குறித்து ஊர்காவற்துறை நீதிமன் றத்தில் தொடரப் பட்ட வழக்கின் அடிப் படையில் பாலஸ்தாபனம் செய்வதற்கு நீதிமன் றம் இடைக் கால தடை உத்தரவை பிறப்பித்திருந்தது.

இந்நிலையில் ஆலயத்தின் திருவெம்பாவை நிகழ்வை கொரோனா காலத்தில் முன்னெடுத்தது போல 2022ம் ஆண்டும் முன்னெடுப்பது என ஆலய நிர்வாகத்தினர் தீர்மானித்தனர். ஆனால், திருவெம்பாவை உற்சவத்துக்காக புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் உறவுகள் பலர் இலங்கைக்கு வருகை தந்திருந்த நிலையில் இன்னும் பலர் இலங்கைக்கு வருவதற்கும் திட்டமிட்டு விமான பயணச் சீட்டுக்களுக்கும் பதிவு செய்திருந்தனர்.

அந்தவகையில் பக்தர்கள் அனைவரும் ஒன்றுகூடி கடந்த 18.12.2022 அன்று ஆலயத்தை நோக்கி அறவழிப் போராட்டப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் போராட்டத்தின் முடிவில் ஆலயத்தின் நம்பிக்கை பொறுப்பாளரிடம் மனுவை கையளிக்க முற்பட்டவேளை அவர் வீட்டில் இல்லை என அவரின் உறவினர்கள் கூறியிருந்தனர். இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட வர்கள் ஆலயத்தின் வாயிலில் மனுவை வைத்து விட்டு போராட்டத்தில் இருந்து கலைந்து சென்றனர்.

அதன்பின்னர் ஆலயத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 13 பேர் தனது வீட்டை எரிக்க முயன்றனர் என்று ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.


இருப்பினும் பொலிஸார் குறித்த பேரணி நடைபெற்ற வேளை தாமும் இருந்தனர் என்றும் அந்த நேரத்தில் அவ்வாறு எரிப்பதற்கான எந்தவிதமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை என கூறி விசாரணையை நடத்துவதற்கு முன்வரவில்லை.

இந்நிலையில் ஆலயத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் இது குறித்து பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடு வழங்கினார். அந்த வகையில் இந்த விடயம் குறித்து விசாரணை நடத்தி தமக்கு அறிக்கை வழங்குமாறு பிரதி பொலிஸ்மா அதிபர் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு அறிவித்தார்.

அந்தவகையில் ஊர்காவற் துறை பொலிஸாரால் சம்பிரதாயபூர்வ விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



| | |
|---|---|
| பெப்ரவரி - 16 | வியாழக்கிழமை |
| சுபகிருது வருடம் - | தை 04 |
| நல்ல நேரம் : | 10.30 - 12.00 |
| ராகு காலம் : | 01.30 - 03.00 |
| திதி : | ஏகாதசி |




**மேடம்**
பிறரின் ஆலோசனைகளைக் கேட்டு செயல்பட வேண்டாம். அதனால் பிரச்னை தோன்றும். உறவினர் ஒருவரால் சங்கடம் ஏற்படும். அனுசரித் துச் செல்வது நன்மை தரும்.

**இடபம்**
நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். உங்கள் செல்வாக்கு உயரும் நாள். சவாலான வேலைகளை கூட சாதாரணமாக செய்து முடிப்பீர். நண்பர்கள் ஆதரவு அதிகமாகும்.

**மிதுனம்**
குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகளைத் தீர்த்து வைப்பீர். எதிரிகள் உங்களிடம் சரணடைவர். சொத்து விவகாரத்தில் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த விவகாரம் முடிவிற்கு வரும்.

**கடகம்**
பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த முயற்சியில் ஈடுபடுவீர். எதிர்பார்த்த வரவு வரும். உங்கள் உதவியை எதிர்பார்த்து உறவினர் வருவார்கள். உங்கள் செல்வாக்கு உயரும். நீண்ட

**சிம்மம்**
எதிர்பாராத பயணம் உண்டாகும் என்றாலும் அதனால் லாபம் அடைவீர். நீங்கள் சந்திக்க நினைத்தவர்களை இன்று சந்திப்பீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளை சரி செய்வீர்.

**கன்னி**
உங்கள் வாழ்க்கைக்கான தைரியமான ஒரு முடிவை எடுப்பீர்கள். வெற்றிகரமான நாள். பெற்றோர் வழியில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும். உங்கள் திறமை வெளிப்படும்.

**துலாம்**
இழுபறியாக இருந்து வந்த வேலைகள் முடிவிற்கு வரும் நாள். பண விஷயத்தில் கவனம் தேவை. கூட்டுத் தொழில் தொடங்கும் முயற்சியில் உங்கள் ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்படும்.

**விருட்சிகம்**
எளிதாக முடிய வேண்டிய வேலைகளும் இழுபறியாகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உங்கள் வழக்கமான செயல்களிலும் தடுமாற்றம் ஏற்படும்.

**தனுசு**
வீண் அலைச்சல் அதிகரிக்கும். நெருக்கமானவர்களிடம் மனஸ்தாபம் ஏற்படும். மறைமுக எதிரிகளால் தொல்லை உண்டாகும். எதிர்பாராத செலவுவால் நெருக்கடி உண்டாகும்.

**மகரம்**
திட்டமிட்டு உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உங்களுக்கு வரவேண்டிய பணம் வீடு தேடி வந்து சேரும் நாள். குடும்பத்தினர் விருப்பங்களை நிறைவேற்றுவீர்.

**கும்பம்**
பணியாளர்களின் ஒத்துழைப்பால் உங்கள் எண்ணம் நிறைவேறும் நாள். நீங்கள் எதிர்பார்த்த பணம் உங்கள் கைக்கு வரும். மற்றவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்**
குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னை தீரும். புதிய சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். மனதில் இருந்த குழப்பம் நீங்கும். விலகிச் சென்ற உறவினர் தேடி வருவார்கள்.

# 13ஆவது திருத்தம் நடைமுறை; விரைவில் நல்ல செய்தி வரும்!

## தமிழக பா. ஜ. க. தலைவர்

சென்னை, பெப். 16

இலங்கையில் 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பல நல்ல செய்திகள் விரைவில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தமிழக பாரதிய ஜனதா கட்சித் தலைவர் கு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், 13 ஆவது சட்டத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கை ஜனாதிபதியை தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய பிரதமரின் தனிப்பட்ட ஆர்வத்துடன் கூடிய பொறுப்பான திட்டமிடலால் மட்டுமே, இலங்கையில் வாழும் தமிழர்களின் நலன் பாதுகாக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இந்த திட்டங்கள் காரணமாக பிராந்தியத்தில் வலுவான நிலவியிருந்த சீன ஆதிக்கம் வெகுவாக அடங்கிப் போயுள்ளது. இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட நெருக்கடி அனைத்தையும் சீராக்கி, நல்லிணக்கத்தை உருவாக்க இந்திய பிரதமர் நரேந்திர மோடி பல்வேறு அமைதி நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கும் காங்கேசன்துறையில் இருந்து காரைக்காலுக்கும் இடையிலான பயணிகள் படகு சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தமிழக பாரதிய ஜனதா கட்சித் தலைவர் மேலும் கூறியுள்ளார்.

# காரில் சிலிண்டர் வெடிப்பு; மேலும் மூன்று பேர் கைது!

கோவை, பெப். 16

கோவை கார் சிலிண்டர் வெடிப்பு சம்பவத்தில், மேலும் 3 பேரை என். ஐ. ஏ. அதிகாரிகள் நேற்று கைது செய்து, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கோயம்புத்தூர், உக்கடம் கோட்டை ஈஸ்வரன் கோயில் அருகே கடந்த ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி கார் சிலிண்டர் வெடித்த சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த விபத்தில், 28 வயது மதிக்கத்தக்க ஜமேஷா முபின் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதையடுத்து தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையை அடுத்து, தற் கொலைப்படை தாக்குதல் நடத்த சதித்திட்டம் தீட்டப்பட்டிருந்தாக தெரிவிக் கப்பட்டது. மேலும், மேற்கொள்ளப்பட்ட சோதனையில் வெடிபொருட்கள் தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருட்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, அவை பறிமுதல் செய்யப்பட்டன. இந்த நிலையில் கார் குண்டு வெடிப்பு வழக்கு தொடர்பாக 6 பேர் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டு கோவை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையை தொடர்ந்து நேற்று திருவண்ணாமலையில் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் சென்னையில் 5 இடங்கள் உள்பட தமிழ்நாடு முழுவதும் என். ஐ. ஏ. அதிகாரிகள் நேற்று காலை முதல் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பி. பி. சி. பணிமனைகள் சோதனை தமிழ்நாடு முதல்வர் கண்டனம்!

சென்னை, பெப். 16

டில்லி, மும்பையில் உள்ள பி. பி. சி. அலுவலகங்களில் வருமான வரித்துறை சோதனை நடத்தியதற்கு தமிழக வமுதலமைச்சர் மு. க. ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் 2002ஆம் ஆண்டு குஜராத்தில் நடந்த கலவரம் தொடர்பாக ஆவணப்படத்தை பிபிசி வெளியிட்டது. பிரதமர் மோடிக்கு எதிராக அந்த ஆவணப்படம் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு குற்றம்சாட்டி இருந்தது.

இதனிடையே நேற்று முன்தினம் டில்லி, மும்பையில் உள்ள பி. பி. சி. அலுவலகங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

இந்நிலையில் பி. பி. சி. அலுவலகத்தில் சோதனை நடத்தியதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக ருவிற்றரல் வெளியிட்டுள்ள பதிவில், ”பா. ஜ. க. தலைமையிலான மத்திய அரசின் கீழ் இந்த நாட்டின் மதிப்புமிக்க நிறுவனங்கள் முற்றிலும் சுதந்திரத்தை இழந்துள்ளன. அரசியல் எதிரிகளை குறிவைக்க அமலாக்கத் துறை, சி. பி. ஐ., வருமான வரித் துறை போன்ற அரசியல் கருவிகள் தாராளமாக பயன்படுத்தப் படுகின்றன. இந்திய ஜனநாயகத்தையும், பத்திரிகை சுதந்திரத்தையும் அழித்ததற்கு காரணமானவர்களை இந்நாட்டு மக்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். வரவிருக்கும் தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்” என்று அந்த பதிவில் கூறியுள்ளார். (ஐ)

# வயிற்றெரிச்சலாலேயே பேனா சின்னத்துக்கு எதிர்ப்பு

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்

ஈரோடு, பெப். 16

பேனா நினைவுச் சின்னத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பது, எதிர்க்கட்சிகளின் வயிற்றெரிச்சலைக் காட்டுகிறது என காங்கிரஸ் தமிழ்நாடு குழு தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்தார்.

ஈரோடு கிழக்கு தொகுதியில் தேர்தல் பிரசாரத்துக்கு வந்துள்ள அவர் கூறியதாவது:

எங்கள் கூட்டணி கொள்கை ரீதியான கூட்டணி. கூட்டணிக்கு மதிப்பு கொடுத்து, நாங்கள் போட்டியிட முதல்வர் ஸ்டாலின் வாய்ப்பு வழங்கினார். ஆனால், எதிரணியில் த. மா. கா. போட்டியிட்ட தொகுதியை அநியாயமாக பிடுங்கி, அ. தி. மு. க. போட்டியிடுகிறது.

எங்களின் வெற்றி ஒவ்வொரு நிமிடமும் அதிகரித்து வருகிறது. தோழமைக் கட்சி போட்டியிடும் இந்த தொகுதியில் முதல்வர் ஸ்டாலின் தனிக்கவனம் செலுத்தி பணியாற்றுகிறார். பா. ஜ. கவிடம் இருந்து விலகி இந்த தேர்தலை சந்திப்பேன் என பழனிசாமி அறிவித்து இருக்கிறார். அண்ணாமலை, மோடியின் படங்களுடன் வந்தால் இந்த தொகுதி மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என அவர்கள் தெரிந்து கொண்டார்கள்.

தேர்தல் முடிந்தவுடன் மீண்டும் ஒன்றாகி விடுவர். பேனா நினைவுச்சின்னத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பது, எதிர்க்கட்சிகளின் வயிற்றெரிச்சலைக் காட்டுகிறது - என்றார். (ஐ)

# புகையிலை நிறுவனங்களுக்கு இப்பொழுது வடக்கு-கிழக்கில் அதிகளவு சந்தை வாய்ப்பு

## போதைப்பொருள் எதிர்ப்புக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 16

**யுத்தம் மௌனிக்கப்பட்ட தன் பின்னர் வடக்கு - கிழக்கை நாங்கள் வெற்றி கொண்டுள் ளோம் என்று புகையிலை நிறு வனங்கள் கூறியிருந்தன. அதா வது முதல் இருந்த சந்தை வாய்ப்பைவிட தற்போது அதிக ளவிலான சந்தை வாய்ப்புகள் கிடைத்துள்ளது என்று கூறி யிருந்ததாக போதைப்பொருள் எதிர்ப்புக் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.**

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பிலேயே அவர்கள் இவ்வாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக் கையில் -

புதிதாக கிடைத்த இந்த சந்தை வாய்ப்பில் 5.1 பில்லியன் ரூபா வருமானமாக கிடைத்த தாக 2010ஆம் ஆண்டு அவர் கள் குறிப்பிட்டிருந்தனர். யுத் தம் முடிந்த பின்னர் புகையிலை நிறுவனங்கள் தந்திரோபாயங் களை மேற்கொண்டு இளை ஞர்களை அதை புகைப்பதற்கு பழக்கினார்கள்.

இலங்கை நாட்டை பொறுத்தவரை பாரிய பொரு ளாதார நெருக்கடியால் அனை வருக்கும் பிரச்னை இருக்கிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்துவதற்குக்கூட எங்களது நாட்டில் பணமில்லை.

இவ்வாறு இருக்கையில் சிகரெட் வரிக் கொள்கையை நாங்கள் எவ்வாறு நடைமுறைப் படுத்தலாம் என்றால் முதலா வதாக விழிப்புணர்வை அதி கரிக்கவேண்டும். அதாவது சிகரெட்டுக்கான வரிக்கொள் கையை சரியான முறையில் அமுல்படுத்தினால் எந்த மாதிரி யான நன்மைகள் அரசாங்கத் துக்கு கிடைக்கும். அதேமாதிரி பொதுமக்களுக்கு எவ்வாறான நன்மைகள் கிடைக்கப்பெறும் என்ற விழிப்புணர்வுகளை ஏற் படுத்தவேண்டும்.

எமது நாட்டில் பண வீக்கத் துக்கு ஏற்றவாறு ஏனைய பொருட்களுடன் ஒப்பிடும் போது சிகரெட்டுக்கான வரி யையோ அல்லது விலை யையோ அரசாங்கம் அதிகரிக்க வில்லை. இதற்கு பிரதான கார ணம் சிகரெட்டின் விலைகளை அதிகரிப்பது அரசாங்கத்தின் கைகளில் மாத்திரமில்லை சில உற்பத்தி நிறுவனங்களின் கை ளிலும் இருக்கிறது.

ஆகவே நிதி அமைச்சும், நிதி அமைச்சின் அதிகாரிகளும் இந்த வரிக் கொள்கையை சரி யான விதத்தில் அமுல்படுத்துவ தற்கும், வரிக் கொள்கைகளை உருவாக்குவதற்கும், வரிச் சுட்டெண்களை உருவாக்குதற் கும் முன்வர வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வருகின்ற காரணத்தால் கட்சிகள், வேட்பாளர்கள், ஏனைய அரசியல்வாதிகள் இந்த வரிக் கொள்கையை உள்வாங்கு வதற்கும், இந்த வரிக் கொள் கையை சரியான விதத்தில் அமுல்படுத்துவதற்கும் முன்வர வேண்டும்.

இது தொடர்பில் பொது மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் வலியுறுத்த வேண்டும் - என்றனர். (அ)

# ஜேர்மனியிடம் தொழில்நுட்ப உதவி முதலீடுகளை கோருகிறது இலங்கை

கொழும்பு, பெப். 16

ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினர் பீட்டர் ராம்சோர் நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை சந்தித்து பேச்சு நடத் தினார்.

ஜேர்மன் - இலங்கை இரு தரப்பு உறவுகளை வலுப்படுத் தும் நோக்கில் பீட்டர் ராம் சோர் நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள் ளார்.

பீட்டர் ராம்சரை மிகவும் அன்புடன் வரவேற்ற ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க, இரு நாடுகளுக்கும் இடையிலான கடந்த கால உறவுகளை நினைவு கூர்ந்து கலந்துரையாடலை ஆரம்பித்தார்.

ஜேர்மன் அரசாங்கத்தின் அனுசரணையுடன் கராப்பிட் டிய வைத்தியசாலையில் செயற் படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து இந்த சந்திப்பில் மீளாய்வு செய்யப் பட்டதுடன் எதிர்கால நடவ டிக்கைகள் குறித்தும் ஆராயப் பட்டது.

இலங்கையில் மேற்கொள்ள வுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் ஜேர்மனியின் தொழில்நுட்ப உதவிகளையும் முதலீட்டையும் எதிர்பார்ப்ப தாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க , இது தொடர்பில் தொடர்ந்தும் உதவிகளை வழங்குமாறு கோரியுள்ளார்.

அத்துடன், இந்நாட்டில் யானை-மனித மோதலை முகாமைத்துவம் செய்வதற்கு ஜேர்மனி அறிமுகப்படுத்தி யுள்ள திட்டங்களுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்த அதேவேளை, அவற்றை நடைமுறைப்படுத்தியமைக்கு பீட்டர் ராம்சோர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

மேலும், ஜேர்மன் தொழில் நுட்பக் கல்லூரிகள் மூலம் இலங்கை மாணவர்களுக்கான பயிற்சித் திட்டங்களை மேலும் விரிவுபடுத்துவதற்கான ஆதரவை எதிர்பார்த்துள்ளதாக வும் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி யின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நிலைபெறு தகு அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் பணிப்பாளர் ரந்துல அபேவீர உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

# எமக்கு நஞ்சுப் போத்தல் தந்துவிட்டு இந்திய மீனவரை அனுமதியுங்கள்!

## காரைநகர் மீனவர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

ஒரு மாத காலத்துக்குள் 60 இலட்சம் ரூபா வலை உடை மைகள் இந்திய இழுவைப் படகுகளினால் சேதம் செய்யப் பட்டுள்ளதாகவும், இந்திய மீன வர்களுக்கு இலங்கை கடற் பரப்பில் மீன்பிடி நடவடிக்கை களுக்கு அனுமதி வழங்கினால் எமக்கு நஞ்சுப் போத்தலை தந்து கொலை செய்யுங்கள் என்றும் யாழ்ப்பாணம்-காரை நகர் அம்பாள் கடற்றொழிலா ளர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அம்பாள் கடற்றொழிலாளர் சங்கத்தில் ஏற்பாடு செய்யப் பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக் கையில்-

எங்களது கடற்றொழில் அமைச்சர் சரி எங்களது அர சாங்கம் சரி எமது பிரச்சினை களில் கரிசனை கொள்கிறார்கள் இல்லை. இப்போது மீன்பிடி பருவகாலம். இவ்வாறான சூழ்நிலையில் எமது மீனவர்கள் தொழில் செய்து உழைக்கும் நேரத்தில் அவர்களது பல இலட்சம் ரூபா பெறுமதியான முதல்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இதனால் ஏனைய தொழிலா ளிகள் கடலுக்கு சென்று தொழில் செய்வதற்கு அஞ்சப்படுகின்றனர். இது குறித்து கடற்படையின ருக்கு தெரிவித்தவேளை தமக்கு கைது செய்வதற்கு அனுமதி இல்லை எனக் கூறுகின்றனர்.

இதற்கு முன்னர் படகுகள் கைது செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது அவ்வாறு நடப்பதில்லை. எமது கரையில் இருந்து 5 கிலோமீற்றர் எல் லைக்குள் வந்து தொழில் செய்து எமது வளங்களை அழிக்கின்றனர்.

தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் ஐயாவே! எமது மீன வர்கள் இந்திய எல்லைக்குள் மீன்பிடிப்பதற்கு வருவதில்லை. நீரோட்டத்தில் அடித்துச் செல் லப்பட்டு அவர்கள் அங்கு வர வேண்டிய சூழ்நிலை ஏற்படுகி றது. ஆனால் அவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

உங்களது நிவாரணங்கள் எவையும் எமக்கு தேவை யில்லை. எங்களை நிம்மதியாக தொழில் செய்வதற்கு விட்டால் நாங்கள் எங்களது வாழ்வாதா ரத்தை கொண்டு செல்வோம்.

கடந்த ஒரு வாரமாகத்தான் எங்கள் கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகு மீனவர்களின் வருகை அதிகரித்து காணப்படு கின்றது. அண்மையில் இந்தியா வில் இருந்து இரண்டு அமைச் சர்கள் இலங்கைக்கு வந்துவிட்டு சென்றுள்ளனர்.

அவர்கள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி எமது கடலுக்குள் நுழைந்து அழிவுகளை ஏற்படுத்தப்போவ தாக எமக்கு சந்தேகம் ஏற்படு கிறது.

இலங்கை அரசின் அனுமதி யோடு அனுமதிப் பத்திரங்களை வழங்குவதன் மூலம் இந்திய மீனவர்கள் இலங்கை கடற் பரப்பில் மீன்பிடிப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெறுவதாக உள்ளூர் மற்றும் இந்திய ஊடகங்கள் மூலமாக எமக்கு அறியக் கிடைத்துள்ளது.

இப்படியான ஏற்பாடுகள் ஏதாவது நடைபெற்றால் எமக்கு உங்களது நிவாரணம் வேண்டாம். எமக்கும் எங்களது மீனவர்கள் அனைவருக்கும் நஞ்சை தந்து கொலை செய்து விட்டு அவர்களை முழுமை யாக இங்கு தொழில் செய்து வளங்களை அழிப்பதற்கு நீங் கள் அனுமதியை வழங்குங்கள் - என்றனர். (அ)

# "மின் கட்டணம் உயர்த்தப்படின் பெரும் எதிர்ப்புப் போராட்டம்!"

கொழும்பு, பெப். 16

மின் கட்டணம் மீண்டும் அதிகரிக்கப்பட் டால், பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை முன் னெடுக்கவுள்ளதாக மின்சார தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விடயம் தொடர்பில் மக்களும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என இலங்கை மின்சார சபை யின் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, தமது எதிர்ப்பையும் மீறி இலங்கை மின்சார சபையின் 66 வீத மின் கட்டண அதிகரிப்பு யோசனைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஏனைய மூவரும் அனுமதி வழங்கியுள்ளனர் என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டார். (அ)

# மரண அறிவித்தல்



## முடியப்பு றெமிடியஸ்

(சட்டத்தரணி, மாநகரசபை உறுப்பினர்)

யாழ்ப்பாணம், பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல சட்டத்தரணியும் யாழ் மாநகரசபை உறுப்பினரான முடியப்பு றெமிடியஸ் கடந்த 11.02.2023 சனிக்கிழமை காலமானார்.

அன்னனார் காலம் சென்ற கயித்தாம்பிள்ளை முடியப்பு – கிறிஸ்ரினம்மா தம்பதியரின் அன்பு மகனும் பிலேந்திரன் சேவியர் – மேரி ஜெனற் தம்பதியரின் அன்பு மருமகனும் மேரி சதாயினியின் அன்பு கணவரும் அபினாஸ், பிரவினாஸ், தனுஷாந் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கிப்சன்(ஜேர்மன்), பொறன்சி(பிரான்ஸ்), நிக்சன், ஜெமிலா, எயூஸ்ரன் டியூரி(கெவின்-பிரான்ஸ்),சுதா ஆகியோரின் சகோதரனும் கொன்சன் (பிரான்ஸ்)சுமதி, யூட்மன்(பிரான்ஸ்),சோபனா(பிரான்ஸ்), டீன்,ஜேசுராஜ், சகாயராஜன், ஜெனா, ஆசா,ஆகியோரின் மைத்துனரும் கௌதமி, ஆகாஸ், மத்தீஸ், மரவா ஆகியோரின் பெரிய தகப்பனும் போல்விம்மன், மேர்சி பிளேசி, யோசப் ஆகியோரின் சிறிய தகப்பனும் டிசாந், ஸ்லொபனி, ஸ்ரொபன், ஷிடான், நிகானா, ஷியோனா, ஷர்மின், ஷப்றினா, ஷர்மன், ஷப்றினா, அமேசா, பெனோஜன், அமேக்கா, செனோபியா, கர்ஸ்சோன் மாரியோ, ஜெசிக்கா ஆகியோரின் ஆசை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பாஷையூர் சென் அன்ரனிஸ் மைதானத்தில் நேற்று (15.02.2023) புதன்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனை வரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.**



# மருத்துவர் சிவரூபனுக்கு நேற்று அமோக வரவேற்பு

கிளிநொச்சி, பெப். 16

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தற்போது விடுதலை செய்யப்பட்ட மருத்துவர் சிவரூபனுக்கு நேற்று அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கிளிநொச்சி-பளை பிரதேச வைத்தியசாலையில் கடமையிலிருந்தபோது 4 ஆண்டுகளுக்கு முன்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் பளை பிரதேச பிரதேச மக்களாலும் மருத்துவ மனை ஊழியர்களாலும் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து மருத்துவர் சிவரூபன் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

# அரசிடம் நிதி உண்டு வாக்குகளே இல்லை

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 16

**நிதி இல்லை என்பதற்காக அல்ல வாக்குகள் இல்லாத தால்தான் தேர்தலை நடத்த அரசாங்கம் தயங்குகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மாமா ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் இந்த வழியை பின்பற்றி இவ்வாறு செய்து வருகின்றார் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை அரசாங்கம் வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக வழங்க முடியாமல் போனமை வரவு-செலவுத் திட்டத்தை இழுப்பதற்கு சமம் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# எரிபொருளைப் பெறுவோரின் எண்ணிக்கை 30 வீதம் வீழ்ச்சி!

கொழும்பு, பெப். 16

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளைப் பெற வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை சுமார் 30 சதவீதம் குறைந்துள்ளதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

எரிபொருளின் விலைகள் அவ்வப்போது அதிகரித்து வருவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

மேலும், கியூ.ஆர் முறைப்படி, ஒரு வாரத்துக்கு தேவையான அளவு எரிபொருளை பெறுவதற்குக்கூட நுகர்வோர் ஆர்வம் காட்டுவதில்லை என்றும் அவர்கள் கூறினர். (அ)

# காதலியை பார்க்க, சாரதிக்கு தெரியாமல் பஸ்ஸை செலுத்திச் சென்று விபத்தை ஏற்படுத்திய நடத்துநர்!

கொழும்பு, பெப். 16

அரச பஸ்ஸில் காதலியை பார்க்கச் சென்று, விபத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் பஸ் நடத்துநர் ஒருவரை கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த பஸ் ரம்புக்கனை - ஹதரலியத்த வீதியில் இயங்கும் பஸ் என்பதுடன், மறுநாள் அதிகாலை 5.30 மணிக்கு ரம்புக்கனை நோக்கிப் பயணத்தை ஆரம்பிப்பதற்காக ஹதரலியத்த பஸ் நிலையத்தில் இரவு வேளையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. சாரதியின் வீடு அருகாமையில் அமைந்துள்ளதால் தினமும் பஸ்ஸை நிறுத்திவிட்டு வீட்டுக்குச் சென்றாலும் நடத்துநர் பஸ்ஸிலேயே தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் குறித்த நடத்துநர், ஹசரலியத்த பஸ் நிலையத்தில் இரவு நேரத்தில் தரிக்கப்பட்டிருந்த ரம்புக்கனை டிப்போவுக்குச் சொந்தமான குறித்த பஸ்ஸை, தனது காதலியைப் பார்ப்பதற்காக 9 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கெபெல்லவத்த என்ற பிரதேசத்துக்கு ஓட்டிச் சென்று, மீண்டும் திரும்பியபோது விபத்தை ஏற்படுத்தியதாக தெரியவந்துள்ளது.

எனினும், விபத்தின் பின்னர் பஸ்ஸை மீண்டும் ஹதரலியத்த பஸ் தரிப்பிடத்துக்கு ஓட்டிச் சென்று அதனை நிறுத்திவிட்டு குறித்த நடத்துநர் அங்கிருந்து வெளியேறியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# கைப்பற்றிய 7 பவுண் தங்கத்தை பதுக்கிய இரு பொலிஸார் கைது!

கொழும்பு, பெப். 16

தங்கப் பொருட்கள் திருடப்பட்ட வழக்கில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

பாணந்துறை தலைமை பொலிஸ் நிலையத்தின் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி மற்றும் கான்ஸ்டபிள் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

தங்கப் பொருட்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கப் பொருட்களில் இருந்து 7 பவுண் தங்கத்தை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாமல் தம் வசம் வைத்திருந்த சம்பவம் தொடர்பிலேயே இந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டனர்.

கண்டி வலய குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் சந்தேக நபர்களான பொலிஸ் உத்தியோகத்தர்களை கைது செய்துள்ளனர். (அ)

# விவசாயிகளுக்கு அநீதி இழைக்கப்படின் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை!

கொழும்பு, பெப். 16

விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்கும் வேலைத்திட்டத்தில் விவசாயிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டால், உரிய அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என விவசாய அபிவிருத்தி திணைக்களம் அறிவித்துள்ளது.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது.

விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 800 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நிதியின் வாயிலாக விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில், பிரதான இரு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கிக் கணக்கு இலக்கங்களில் மோசடி செய்து சிலர் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்படுவதோடு, சிலருக்கு கட்சி அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சுமணரத்ன தேரரின் இல்லம்மீது சூடு: ஒருவர் கைது; உறவினருக்கு வலைவீச்சு

கொழும்பு, பெப். 16

அம்பிட்டிய சுமணரத்ன தேரர் வசிக்கும் அம்பாறை, கெவிலியாமடு அமரராமய விகாரையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த 13ஆம் திகதி அதிகாலை உந்துருளியில் வந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரி ஒருவரினால் இந்த துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்தது.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்தினால் தேரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய, சுமணரத்ன தேரரின் உறவினர் ஒருவரை தேடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# 27 பிரதான கூட்டங்கள் நடத்த மொட்டு திட்டம்



கொழும்பு, பெப். 16

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை முன்னிட்டு சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் முதலாவது பிரதான தேர்தல் பிரசாரக் கூட்டம் அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் பங்கேற்கும் 27 பிரதானக் கூட்டங்கள் மொட்டுக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியால் பொருளாதார திட்டம் வெளியீடு

கொழும்பு, பெப். 15

ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால பொருளாதார திட்டம் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

இது தொடர்பிலான நிகழ்வு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் கொழும்பில் நடைபெற்றது.

கடன்பொறியில் இருந்து விடுபட்டு, நிலையான அபிவிருத்தியை நோக்கி செல்லும் விதம் குறித்து ஐக்கிய மக்கள் சக்தி தமது எதிர்கால பொருளாதாரத் திட்டத்தை தெளிவுபடுத்தியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான 10 விடயங்கள் தொடர்பில் இதில் விவரிக்கப்பட்டுள்ளன.

கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரத்ன, கபீர் ஹாஷிம் ஆகியோர் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் கொள்கைகள் பிரிவு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

புளூபிரிண்ட் 2.0 எனும் இந்த பொருளாதார திட்டம் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான வளர்ச்சிக்கான 10 விடயங்களை உள்ளடக்கியது.

அவையாவன...

1. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறல்
2. கடன் நெருக்கடி முகாமைத்துவம்
3. பணவியல் மற்றும் மாற்று விகிதக் கொள்கை
4. வருமான ஒருங்கிணைப்பு
5. செலவினக் கட்டுப்பாடு
6. வர்த்தகம், தொழில், விவசாயம் மற்றும் சேவைகள் மேம்பாடு
7. அரச துறை முகாமைத்துவம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல்
8. ஆற்றல் மற்றும் பயன்பாட்டு சீர்திருத்தம்
9. சந்தை பொருளாதார சீர்திருத்தம்
10. வலுவான சமூக பாதுகாப்பு வலையமைப்பு. (அ)

ஈழநாடு



# அரச அச்சகத்திற்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை

## பவ்ரல் அமைப்பு அறிவிப்பு

கொழும்பு, பெப். 16

**வாக்குச் சீட்டுகளை வழங்கத் தவறிய அரச அச்சகத் துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தேர்தல் கண் காணிப்பாளர்கள் தீர்மானித்துள்ளனர்.**

வாக்குச் சீட்டுகளை வழங் காமல் இருக்க அரச அச்சகம் அரசியலமைப்புக்கு முரணான தீர்மானத்தை எடுத்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவும் அரசாங்க அச்சகத் துக்கு எதிராக சட்ட நடவ டிக்கை எடுக்க வேண்டும் என பவ்ரல் அமைப்பின் பணிப்பா ளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

தபால் மூல வாக்களிப்புக் கான வாக்குச் சீட்டுகள் அடங்கிய பாதுகாப்பான பொதிகள் நேற்று புதன்கிழமை இலங்கை தபால் திணைக்களத் திடம் கையளிக்கப்படவிருந் தது.

எனினும் வாக்குச் சீட்டுகள் வழங்கப்படாததால், அந்தச் செயல்முறை காலவரையின்றி இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பேஸ்புக் களியாட்டத்தில் ஈடுபட்ட 32 பேர் சிக்கினர்!

கொழும்பு, பெப். 16

பியகம பிரதேசத்தில் இடம் பெற்ற பேஸ்புக் களியாட்டத் தில் கலந்து கொண்ட 32 பேர் போதைப்பொருள் உள்ளிட்ட வற்றுடன் கைது செய்யப்பட் டனர்.

இரகசிய தகவலின் அடிப் படையில் பியகமவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போதே குறித்த குழுவினர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது.

கஞ்சாவுடன் 7 பேர், போதை மாத்திரைகளுடன் 4 பேர், ஐஸ் போதைப்பொருளு டன் ஒரு நபர், வரி செலுத்தா மல் இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுகளுடன் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் 6 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மருதானை, கிராண்ட்பாஸ், மட்டக்குளி, முகத்துவாரம், வெல்லம்பிட்டி, பேலிய கொடை மற்றும் களனி ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் 20 மற்றும் 27 வயதுடையவர்கள். இவர்களில் யுவதியொருவரும் உள்ளடங்கிறார். (அ)

# பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து சிறுவன் மரணம்!

வவுனியா, பெப். 16

வவுனியா, செட்டிகுளம் நேரியகுளம் பகுதியில் வீடொன்றிற்கு அருகில் உள்ள பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி விழுந்து 12 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்த சிறுவன் நேரிய குளம் துடுவாய் பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சிறுவன் காணாமல் போனதை அறிந்ததும், சிறு வனின் தந்தை, உள்ளூர்வாசி களுடன் சேர்ந்து தேடுதல் நட வடிக்கையை மேற்கொண்ட னர். இதன்போது சிறுவன் கிணற்றுக்குள் சிக்கியிருப்ப தைக் கண்டனர்.

எவ்வாறாயினும், அவரை மீட்டு செட்டிகுளம் வைத்திய சாலையில் அனுமதித்தபோதி லும் சிறுவன் உயிரிழந்தார். (அ)

# சிங்கள மொழியில் பொலிஸ் கட்டளை திருப்பி அனுப்பினார் சிறிதரன் எம்.பி.

கொழும்பு, பெப். 16

சிங்கள மொழியில் மாத்தி ரம் பொலிஸ் கட்டளையினை பொலிஸார், கொண்டுவந்த தால் அதனை ஏற்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மறுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனை, நீதி மன்றம் ஆஜராகுமாறு கூறும் பொலிஸ் கட்டளையை பொலிஸார் நேற்றுமுன்தினம் வழங்கியிருந்தனர்.

அந்த கட்டளை சிங்கள மொழியில் மாத்திரம் இருந்த தால் சிங்கள மொழி தனக்கு வாசிக்கத் தெரியாது எனவும் ஆகவே இந்த கட்டளையைத் தன்னால் ஏற்றுக் கொள்ள முடி யாது எனவும் தமிழில் கொண்டு வந்து தருமாறும் கூறி அவர்களி டம் மீளக்கையளித்தார்.

இதனையடுத்து அவர்கள் தமிழில் மொழி பெயர்த்து கொண்டு வந்து கொடுத்த போது, நீதிமன்றத்துக்கு தன்னை வருவதற்கு அழைக்கும் அழைப்பை நீதிமன்றம்தான் வழங்க முடியுமே தவிர நீதி மன்றத்துக்கு அழைக்கும் அழைப்பை பொலிஸாரினால் வழங்கமுடியுமா என பாராளு மன்ற உறுப்பினர் வினவிய போது பொலிஸார், அமைதி யாக இருந்தனர். (அ)

# இந்திய பிரதமரின் செயலாளருடன் தூதுவர் மிலிந்த மொரகொட பேச்சு

கொழும்பு, பெப். 16

இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயம் தொடர்பில் இலங்கைத் தூதுவர் மிலிந்த மொர கொட, இந்திய பிரதமரின் முதன்மை செயலாளர் பிரமோட்குமார் மிஸ்ராவை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு புதுடில்லியில் இடம் பெற்றுள்ளது.

எனினும் இலங்கை ஜனாதிபதியின் உத்தி யோகபூர்வ இந்திய பயணம் தொடர்பான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில், இந்திய பிரதமரின் முதன் மைச் செயலாளருடனான சந்திப்பின்போது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது இலங்கையுடனான இந்தியாவின் வரலாற்று மற்றும் ஆழமான உறவுகளை நினைவு கூர்ந்த இந்திய பிரதமரின் முதன்மைச் செயலாளர், அண்டை நாடு நெருக்கடியை எதிர்கொள்ளும் போது உதவுவது இந்தியாவின் கடமை என்று கூறியுள்ளார்.

இதேவேளை 2009ஆம் ஆண்டு பிரதமர் நரேந் திர மோடி குஜராத் முதலமைச்சராக இருந்த போது இலங்கைக்கும் குஜராத் மாநிலத்துக்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந் தத்தைப் பயன்படுத்தி, சுற்றுலாத் துறையில் இரு



தரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழி முறைகள் குறித்து இருவரும் கலந்துரையாடினர்.

இதற்கிடையில் இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட, கடந்த சில வாரங்களில், இந்திய நிதிச் செயலர் டி.வி. சோமநாதன், அமைச்சரவைச் செயலர் ராஜீவ் கௌபா மற்றும் இந்தியாவின் மத் திய திட்டக்குழுவுக்கு மாற்றாக அமைக்கப்பட்ட குழுவான நிதி ஆயோக்கின் தலைவர் பரமேஸ் வரன் ஐயர் உட்பட இந்திய அரசின் பல முக்கிய அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடினார். (அ)

# வங்கிக் கணக்குகள் இடைநிறுத்தம் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு?

கொழும்பு, பெப். 16

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் நிரப்பு நிலையங்களின் விநியோ கஸ்தர்களினால் மக்கள் வங்கி யில் வைப்பிலிடப்பட்டுள்ள பணத்தின் கணக்குப் பதிவுகள் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் இடைநிறுத்தப்பட்டுள்ள தாக தகவல்கள் வெளியாகியுள் ளன.

இந்நிலையில், நாட்டில் மீண்டும் எரிபொருள் தட்டுப் பாடு ஏற்படும் அபாயம் காணப் படுவதாக எரிபொருள் விநி யோகஸ்தர்கள் சங்கம் தெரி வித்துள்ளது.

பணம் செலுத்தப்பட்ட போதிலும் விநியோகஸ்தர்க ளுக்கு எரிபொருளை பெற்றுக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் மக்கள் வங்கியின் தலைவருக்கும் இலங்கை பெற் றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர் மட்டத்துக்கும் தெரி யப்படுத்தி தீர்வு காண நட வடிக்கை எடுத்து வருவதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது.

மக்கள் வங்கியின் கணக்கில் பணத்தை வைப்பிலிடும் விநி யோகஸ்தர்களுக்கு எரிபொருள் வழங்கப்படமாட்டாது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சப்ரகமுவ பிராந்திய முகாமையாளர் அறி வித்துள்ளதாக விநியோகஸ் தர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# மரக்கறி நுகர்வில் வீழ்ச்சி

கொழும்பு, பெப். 16

நாட்டில் மரக்கறி நுகர்வில் பாரியளவு வீழ்ச்சி பதிவாகியுள் ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் மரக்கறி நுகர்வை 50 வீதத்தினால் குறைத்துக் கொண்டுள்ளதாகவும், மரக்கறி மொத்தவிலை ஸ்திரமற்ற நிலையில் காணப்படுவதாகவும் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் செயலாளர் ஐ.ஜீ. விஜயானந்த தெரிவித்தார்.

மரக்கறி மொத்த விற்பனை குறைந்துள்ள காரணத்தினால் கொள்வனவாளர்கள் மரக்கறி வகைகளை போக்குவரத்து செய்வதிலிருந்து விலகிக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் விலை ஏற் றத்தை தொடர்ந்து மரக்கறி கொள்வனவு செய்ய வருவோ ரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது என அவர் கூறினார்.

தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு மரக்கறி விலைகள் உயர்வடைந்த காரணத்தினால் மக்கள் தங்களது நுகர்வை அரைவாசி அளவில் குறைத்துக் கொண்டுள்ளனர்.

ஒரு கிலோ கிராம் போஞ்சி 350 ரூபாவுக்கும், ஒரு கிலோ கிராம் கறிமிளகாய் 450 ரூபா விற்கும், கரட் ஒரு கிலோ கிராம் 100 முதல் 120 ரூபாவிற் கும், லீக்ஸ் ஒரு கிலோகிராம் 220 ரூபாவிற்கும், கத்தரி ஒரு கிலோகிராம் 120 முதல் 150 ரூபாவிற்கும், கோவா ஒரு கிலோகிராம் 30 முதல் 40 ரூபா விற்கும், பச்சை மிளகாய் ஒரு கிலோகிராம் 200 முதல் 230 ரூபாவிற்கும் மொத்த விற்ப னையின் போது விற்பனை செய்யப்பட்டுள்ளது. (அ)

# மீண்டும் பரபரப்பாகியுள்ள மத்தள விமான நிலையம்!

கொழும்பு, பெப். 16

மத்தள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் பல வருடங்களின் பின்னர் மீண்டும் பரபரப்பாக மாறி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்ய விமானங்கள் மத்தள விமான நிலையத்தை நோக்கி தமது செயற்பாடுகளை இயக்கியுள்ளமையே அதற்கு முக்கிய காரணமாகும்.

கடந்த சில நாட்களாக ரஷ்ய விமான சேவைக்கு சொந்தமான "ரெட் விங்ஸ்" மற்றும் ஏனைய ரஷ்ய விமா னங்கள் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை வருகை தந்த பயணிகளின் எண்ணிக்கை 800 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# தமிழ் புலம்பெயர் சமூகம் (டயஸ்போறா) என்ன செய்யலாம்?



யதீந்திரா

தமிழர் அரசியலில் புலம்பெயர் சமூகம் பிரிக்க முடியாதவொரு அங்கம். இதனை எவராலும் சீர்குலைக்க முடியாது. சீர்குலைக்கவும் அனுமதிக்கக் கூடாது. 2009இல் யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து, புலம்பெயர் சமூகம் தமிழ் தேசிய அரசியலில் பிரதான குரலானது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான சர்வதேச குரலாக மாறியது. எனினும் புலம் பெயர் சமூகத்தின் உழைப்பு எதிர்பார்த்த பலனை தரவில்லை. ஐ.நா மனித உரிமை கள் பேரவையின் பிரேரணைகள், சில தனி நபர்கள் மீதான அமெரிக்க தடைகள், தற்போது முன்னாள் ஜனாதிபதிகளான ராஜபக்சக்கள் மீதான கனடாவின் தடை - இவற்றை தவிர குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய விடயங்கள் எவையும் கடந்த 13 வருடங்களில் நிகழவில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால், புலம்பெயர் சமூகம் இன்னும் அதிக தூரம் பய ணிக்க வேண்டியிருக்கின்றது. அதற்காக ஒன்றுபட்டு உழைக்க வேண்டியிருக் கின்றது. ஆனால் இதிலுள்ள அடிப்ப டையான சவால் தாயகத்தின் நிலைமை யாகும். தாயகமென்று ஒன்று இருந் தால்தான் புலம்பெயர் சமூகம் செயற்பட முடியும்.

தாயகத்தின் பிரதான சவால்கள் இரண்டு. ஒன்று, மிகவும் பலவீனமான அரசியல் தலைமைத்துவம். அதாவது, கடந்த 75 வருடகால தமிழர் அரசியல் வரலாற்றில் இப்போது இருப்பது போன்றதொரு பலவீனமான அரசியல் தலைமைத்துவம் முன்னர் ஒருபோதும் இருந்ததில்லை. சிதறிச் செல்லுவோரை ஒன்றுதிரட்டி, வழிநடத்தக் கூடிய ஆளுமை மிக்க நபர் (கள்) தமிழ் சமூகத் திலில்லை. கடந்த பதின்மூன்று வருட கால அரசியல் நகர்வுகளை உற்றுநோக்கினால், எந்தளவிற்கு தமிழ் தேசிய அரசியல் சிதைந்து, சீரழிந்திருக்கின்றது என்பதை காணலாம். 2009இல் யுத்தம் முடிவுற்ற போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே, தமிழ் மக்களின் ஒரேயொரு தாயக தலைமையாக இருந்தது. ஆனால் இன்றோ பத்து கட்சிகள் தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றன. இப்போது கூட்டமைப்பிலிருந்து தமிழரசு கட்சியும் வெளியேறி விட்டது.

இவ்வாறு தாயக அரசியல் சிதைந்து போனமைக்கு சிலரின் சுயநலப்போக்கை ஒரு காரணமாக கூறிமுடியுமனாலும் கூட, அனைவரையும் அரவணைத்து, வழிநடத்தக் கூடிய தனிநபர் ஆளுமைகள் இல்லைமையே பிரதான காரணமாகும். ஏனெனில் ஒரு அரசியல் இயக்கத்தில் பல்வேறு வகையானவர்கள் வந்து சேர்வார்கள். அவர்களில் சிலர், அரசியலை தங்களின் சுயநலத்திற்கும் புகழுக்கும் பயன்படுத்த வேண்டுமென்று எண்ணுபவர்களாக இருக்கலாம், ஆனால், அவ்வாறானவர்களின் ஆதிக்கத்திற்குள் ஒரு இயக்கம் வீழ்ந்துவிடாமல் இருக்க வேண்டுமானால், அது நான் மேலே குறிப்பிட்டவாறான ஆளுமைமிக்க தலைவர்களில்தான் தங்கியிருக்கின்றது. ஆனால் அவ்வாறான ஆளுமைகளுக்கு பஞ்சம் காணப்படுகின்றது. அதே வேளை அண்மைக்காலத்தில் அவ்வாறானதொரு ஆளுமை வெளித்தெரிவதற்கான வாய்ப்பும் இல்லை.

இந்த நிலையில் ஒரு கூட்டுத் தலைமை ஒன்றின் மூலம்தான் அரசியலை முன்னெடுக்க முடியும். ஆனால் அதிலும் பிரச்சினைகள் ஏராளம். இவ்வாறானதொரு சூழலில் தாயக அரசியலை பலப்படுத்த வேண்டிய பணியும் புலம்பெயர் சமூகத்திற்குண்டு. இதற்கு முன்னரும் சில சந்தர்பங்களில் இந்தக் பத்தியில் சில விடயங்களை சுட்டிக்காட்டியிருக்கின்றேன். அதாவது, புலம்பெயர் சமூகம் தாயக அரசியல் கட்சிகள் மத்தியில், ஒரு குறிப்பிட்ட கட்சிக்கான ஆதரவு நிலைப்பாட்டை எடுக்கக் கூடாது. விடயங்களின் அடிப்படையில்தான் தாயக அரசியலில் தலையீடு செய்ய வேண்டும். அவ்வாறில்லாது, கட்சியடிப்படையில் சில நிலைப்பாடுகளை முன்னெடுக்கும் போது, அது புலம்பெயர் சூழலிலும் பிளவுகளை ஏற்படுத்தும். ஏற்படுத்தியுமிருக்கின்றது. ஆரம்பத்திலிருந்தே சில புலம்பெயர் அமைப்புக்கள் இந்த விடயத்தில் தவறிழைத்திருந்தன. தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர் நிலையிலிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கட்சியை சிலர் ஆதரித்தனர். அவர்களை பலப்படுத்த முயற்சித்தனர். அதே போன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசு கட்சியை முன்னிலைப்படுத்துவதற்கு சிலர்




முன்னுரிமையளித்தனர். விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய ஆயுதப் போராட்ட இயக்கங்களுக்கும் இடையில் பல முரண்பாடுகளிருந்ததும், ஏனைய அமைப்புக்களை விடுதலைப் புலிகள் தடைசெய்தமையும், மோதலில் ஈடுபட்டதும், பலர் உயிரிழந்ததும் வரலாறு. ஆனால் பிற்காலத்தில் அதே அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட விடுதலைப் புலிகள் அமைப்பு பின்நிற்கவில்லை. காலப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் சிலவற்றை ஏற்க வேண்டிய யதார்த்தத்தை புலிகளாலும் நிராகரிக்க முடியவில்லை.

இந்த பின்னணியில் சிந்தித்தால், 2009 இற்கு பின்னரான சூழலில் அனைத்து தரப்புக்களையும் அரவணைத்து, முன்நோக்கி பயணிப்பதில் புலம்பெயர் சமூகம்தான் முன்னணி வகித்திருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை. ஆனால் சில கட்சிகளை, சில நபர்களை முன்னிலைப்படுத்தியதன் மூலம் புலம்பெயர் அமைப்புக்கள் சாதித்தது என்ன? எதுவுமில்லை. கடந்த பதின்மூன்று வருடங்களில் தாயக அரசியல் பலவீனமடைந்திருக்கின்றதே தவிர பலமடையவில்லை. அது பலமடையவில்லையாயின், அந்தப் பலவீனத்திற்கு கட்சிகளை, தனிநபர் களை ஆதரித்த புலம்பெயர் அமைப்புக்களுமல்லவா பொறுப்பேற்ப வேண்டும். தமிழர் தாயகத்தில், அரச ஆதரவு கட்சிகளின் செல்வாக்கு முன்னரைவிடவும் அதிகரித்திருக்கின்றது. தற்போது தமிழ் தேசிய அரசியல் தரப்புக்கள் நான்கு அணிகளாக போட்டியிடுகின்றன. இந்த நிலைமையானது, அரசாங்க கட்சிகளை பொறுத்தவரையில், பழம் நழுவி பாலில் விழுந்த கதையாகலாம்.

புலம்பெயர் அமைப்புக்கள் ஒரு விடயத்தை குறித்துக் கொள்ள வேண்டும். ஒரு அரசின் நகர்வுகளுக்கு எதிராகவே புலம்பெயர் அமைப்புக்கள் போராடிவருகின்றன. ஒரு அரசிற்கு இருக்கின்ற எந்தவொரு வாய்ப்பும் புலம்பெயர் சமூகத்திற்கில்லை. ஆனால் ஐரோப்பிய நிலத்தில் நின்றவாறு, மேற்குலகின் மனச்சாட்சியை உலுப்பும் கேள்விகளை முன்வைக்கும் வல்லமை புலம்பெயர் சமூகத்திற்குண்டு. டயஸ்போறா லொபியென்பது இந்த அடிப்படையை கொண்டதாகவே இருக்க வேண்டும். ஆனால் என்னதான் நீதி பற்றியும் ஜனநாயக விழுமியங்கள் தொடர்பில் பேசினாலும் கூட, சர்வதேச நகர்வுகளை தீர்மானிப்பது நீதிக்கான தீர்மானங்கள் அல்ல - மாறாக, பலம்பொருந்திய நாடுகளின் நலன்கள் மட்டுமே இறுதியில் அனைத்தையும் தீர்மானிக்கின்றது. அதனை கருத்தில் கொள்ளாமல் மேற்குலகின் - உதாரணமாக கனடிய தடைகளை கருத் தில் கொண்டு திருப்திப்பட்டுக் கொண்டால், அது நமக்கு பயன்படாது.

இது பல்துருவ உலகம். உலக அதிகார கட்டமைப்புக்கள் பெரியளவில் மாறிவிட்டன. இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்தது போன்ற நிலையில் அமெரிக்காவுமில்லை. இன்றைய உலக நகர்வுகளில் பிராந்தியங்கள் பிர தான செல்வாக்குச் செலுத்துகின்றன. நாம் விரும்பினாலும் விரும் பாவிட்டாலும் அரசியல் யதார்தங்களை புறம்தள்ளி ஒரு இம்மியளவு கூட நம்மால், நகர முடியாது. இந்த பின்புலத்தில் இந்தியாவின் கரிசனைகள், நிலைப்பாடுகள் தவிர்க்கவே முடியாதவை.

தமிழ் மக்களுக்கான அரசியல் அதிகாரம் தொடர்பில் இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றது. அதே வேளை, அதன் அடிப் படையாக இந்திய - இலங்கை ஒப் பந்தத்தையும் அழுத்தி வருகின்றது. ஒரு பிராந்திய சக்தியும் உடனடி அயல் நாடுமான இந்தியா, இருத ரப்பு உடன் பாட்டை கொண்டிருக்கும் போது, அதில் எந்தவொரு வெளித்தரப்பும் தலையீடு செய்ய முடியாது. மேலும் இந்தியாவிற் கும் அமெரிக்காவிற்கும் இடையில் சில விடயங்களில் வேறுபாடுகள் இருந்தாலும் கூட, இந்தோ-பசுபிக் மூலோபயத்தில் இந்தியா ஒரு வலுவான பங்காளி. மேலும் இந்தியா பொருளாதா ரீதியிலும் வேகமாக வளர்ச்சிடைந்துவரும் ஒரு நாடு. அண்மையில் முன்னாள் கலானிய ஆட்சியாளரான பிரித் தானிவையே இந்தியா பொருளாதார ரீதியில் பின்னுக்கு தள்ளியிருந்தது. இந்தியாவின் சர்வதேச முக்கியத்துவம் முன்னரை விடவும் வேகமாக பெருகிவருகின்றது. இந்த பின்புலத்தில் நோக்கினால், புலம்பெயர் அமைப்புக்கள் மேற்கை தளமாகக் கொண்டு உறுதியுடன் செயற்படும் அதே வேளை, இந்த பிராந்திய யதார்தங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

தற்போது, மீளவும் கொழும்பு அரசியல் தீர்வு தொடர்பில் பேசிவருகின்றது. ரணில் விக்கிரமசிங்க அதில் எந்தளவு தூரம் உண்மையாக இருப்பார் - உறுதியாக இருப்பார் என்பது நமது பிரச்சினையில்லை. அது கொழும்பின் - சிங்கள அரசியல் சமூகத்தின் பிரச்சினை. ஆனால் ரணில் கையிலெடுத்திருக்கும் விடயம் சிக்கலானது. ரணில் 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக கூறுகின்றார். அதனையே இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. ஆனால் தற்போது அதனை அமுல்படுத்த விடமாட்டோமென்று கூறி, சிங்கள கடும்போக்கு தரப்புக்களும் பௌத்த சங்கங்களும் வீதிக்கு வருகின்றன. 13வது திருத்தச் சட்டத்தின் நகலை கொழுத்தி எதிர்ப்பு வெளியிடப்படுகின்றது.

ஆனால் ரணில் விக்கிரமசிங்கவோ எவர் எதிர்த்தாலும் நான் சில விடயங்களை செய்யத்தான் போகின்றேன் என்கின்றார். ரணில் விரைவில் இந்தியா செல்லவுள்ளார். பிரதமர் மோடியுடனான சந்திப்பின் போது, ரணில், 13 தொடர்பில் நிச்சயம் பேசுவார். உத்தியோகபூர்வமாக அறிவிக்கவும் இடமுண்டு. இந்த விடயங்களில் புலம்பெயர் சமூகம் அசமந்தமாக இருக்கக் கூடாது. சிலர் (தாயகத்திலும் புலத்திலும்) கூறுவது போன்று இது சாதாரண நகர்வல்ல. இது ஒரு மூலோபாய நகர்வு. நாங்கள் எப்போதோ, 13வது திருத்தத்தை நிராகரித்துவிட்டோம் - அது பற்றி இப்போது பேச வேண்டியதில்லையென்று சாதாரணமாக கூறிவிட்டுச் செல்லக் கூடிய விடயமல்ல. இது வெறுமனே 13பற்றியதல்ல. மாறாக இது ஒரு புவிசார் அரசியல் விவகாரம். இந்த விடயங்கள் தொடர்பில் புலம்பெயர் அமைப்புக்கள் நிதானமாகவும், சகிப்பு ணர்வோடும் விடயங்களுக்கு எதிர்வி னையாற்ற வேண்டும்.

13இற்கு வெளியிடப்படும் எதிர்ப்பையே சர்வதேச அரங்குகளில் அரசியல் லொபியாக முன்வைக்க வேண்டும். 13 இனை அமுல்படுத்த ரணிலால் முடியாமல் போகும் இடம்தான், புலம்பெயர் சமூகத்தின் அடுத்த கட்ட லொபிக்கான அஸ்திபாரமாகும். இந்த லொபியை பலமாக முன்னெடுப்பதற்கு புலம்பெயர் சமூகம் தன்னை தயார் செய்ய வேண்டும். நான் மேலே குறிப்பிட்டவாறு, பிளவுண்டு செல்லும் தாயக கட்சிகள் மீது முதலிட்டுக் கொண்டிருக்காமல், ஒரு புலம்பெயர் சமூகமாக திரட்சிபெற வேண்டும். இதற்கு அறிவூட்டக் கூடிய தனிநபர்களையம் அமைப்புக்களையும் (இரு இடங்களிலும்) அணிதிரட்ட வேண்டும். குறிப்பாக, புலம்பெயர் சமூகத்தின் லொபி அமெரிக்காவை தளமாகக் கொண்டிருக்க வேண்டும். வேறு நாடுகளில் என்னதான் குரல்களை எழுப்பினாலும் அது பெரியளவில் தாக்கங்களை ஏற்படுத்தாது. உலக ஒழுங்கினை தீர்மானிக்கும் மேற்குலக சக்தி அமெரிக்கா மட்டும்தான். அங்குதான் புலம்பெயர் லொபி மையம்கொள்ள வேண்டும். அப்போதுதான் புதுடில்லியுடனும் ஊடாடுவது இலகுவாகும். ஆனால் அதற்கு சில தகுதிநிலைகள் அவசியம். புலம்பெயர் செயற்பாடுகளுக்கு தலைமையேற்பவர்கள் தங்களை தாராளவாத அரசியல் விழுமியங்களுக்குரியவர்களாக மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நம்மால், அமெரிக்க உலகில் அசைய முடியாது.

# பிபிசி இந்திய அலுவலகங்களில் வருமான வரித்துறையினர் ஆய்வு

இந்திய தலைநகர் டில்லி மற்றும் மும்பையில் உள்ள பிபிசி அலுவலகங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்தி வருகின்றனர்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை விமர்சித்து பிரிட்டனில் பிபிசியின் ஆவணப்படம் ஒளிபரப்பான சில வாரங்களுக்குப் பிறகு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

2002இல் குஜராத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையில் அப்போதைய முதல்வராக இருந்த நரேந்திர மோடியின் பங்கு தொடர்பாக பிபிசி ஆவணப்படத்தில் தகவல்கள் இடம்பெற்றிருந்தன. அதை இந்தியாவில் பகிரவும் சமூக ஊடகங்கள் வாயிலாக பார்க்க முடியாதவாறும் இந்திய அரசு முடக்கியது.

இந்த நிலையில், பிபிசியின் இந்திய அலுவலகங்களில் அதிகாரிகள் நடத்தி வரும் ஆய்வுக்கு ‘முழுமையாக ஒத்துழைப்பதாக” பிபிசி தெரிவித்திருக்கிறது.

‘இந்த நிலைமை விரைவில் தீர்க்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்,” என்று அறிக்கை மூலம் பிபிசி கூறியுள்ளது.



### நடவடிக்கைக்கு எதிர்வினை

இந்திய எதிர்க்கட்சியான காங்கிர ஸின் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால், ‘இந்த நடவடிக்கை, விரக்தியில் மூழ்கிய மோடி அரசு விமர்சனங்களுக்கு பயப்படுவதைக் காட்டுகிறது” என்று கூறியுள்ளார்.

‘இத்தகைய மிரட்டல் தந்திரங்களை கடுமையான முறையில் நாங்கள் கண்டிக்கிறோம். இந்த ஜனநாயகமற்ற, சர்வாதிகார அணுகுமுறை இனியும் தொடர முடியாது” என்று அவர் ட்வீட் செய்துள்ளார்.

இதேவேளை, மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் செய்தித் தொடர்பாளர் கௌரவ் பாட்டியா ‘உலகின் மிகவும் ஊழல் நிறைந்த அமைப்பு பிபிசி” என்று விமர்சித்துள்ளார்.

‘நீங்கள் விஷத்தை கக்காத வரையில், ஒவ்வொரு அமைப்புக்கும் வாய்ப்பளிக்கும் நாடு இந்தியா” என்று அவர் கூறியுள்ளார்.

வருமான வரித்துறையினரின் ஆய்வு நடவடிக்கை சட்டபூர்வமானது என்றும் ஆய்வு நடக்கும் நேரத்துக்கும் அரசாங்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### ஊடக சங்கங்கள் எதிர்ப்பு

இந்தியாவில் உள்ள முக்கிய ஊடகங்களின் ஆசிரியர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள எடிட்டர்ஸ் கில்ட் ஒப் இந்தியா, பிபிசி அலுவலகங்களில் வருமான வரித்துறை ஆய்வு நடவடிக்கைகள் குறித்து தமது ‘ஆழ்ந்த கவலையை” வெளிப்படுத்தியுள்ளது.

‘அரசாங்கக் கொள்கைகள் அல்லது ஆளும் அமைப்பை விமர்சிக்கும் ஊடகங்களை மிரட்டுவதற்கும் துன்புறுத்துவதற்கும் அரசுத் துறைகளை பயன்படுத்தும் போக்கின் தொடர்ச்சி இவை” என்று எடிட்டர்ஸ் கில்ட் ஒப் இந்தியா கூறியுள்ளது.

பிரஸ் கிளப் ஒப் இந்தியா வெளியிட்டுள்ள அறிக்கையில், பிபிசி அலுவலகங்களில் வருமான வரித்துறை ‘சர்வே” செய்வதை வன்மையாகக் கண்டிப்பதாக கூறியுள்ளது.

சமீப காலங்களில் தனக்கு எதிராகவும், ஆளும் அமைப்புக்கு எதிராகவும் உள்ள ஊடகங்களை விரோதமாக அரசாங்கம் கருதுகிறது. அதன் ஒரு பகுதியாக அத்தகைய ஊடகங்கள் மீது நடக்கும் தாக்குதலின் அங்கமாகவே இந்த ஆய்வு உள்ளது என்று இந்திய பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

### சர்வதேச மன்னிப்புச்சபை எதிர்ப்பு

ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் என்ற சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்திய பிரிவு, ‘ஆளும் பாரதிய ஜனதா கட்சி மீதான பிபிசியின் ஆழமான செய்திகள் தொடர்பாக அதை துன்புறுத்தவும் மிரட்டவும் முயற்சி நடக்கிறது,” என்று குற்றம்சாட்டியுள்ளது.

‘வருமான வரித் துறையின் பரந்த அதிகாரங்கள், எதிர்க்குரல்களை அமைதிப்படுத்த மீண்டும் ஆயுதமாக்கப்படுகின்றன” என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

**இந்திய பிரதமர் நரேந்திர மோடியை விமர்சித்து பிரிட்டனில் பிபிசியின் ஆவணப்படம் ஒளிபரப்பான சில வாரங்களுக்குப் பிறகு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.**

2002ஆம் ஆண்டில் நடந்த குஜராத் கலவரத்தின் போது மோடியின் நடவடிக்கைகள் குறித்து கேள்விகளை எழுப்பும், பிரிட்டன் வெளியுறவு அலுவலகத்திலிருந்து பிபிசி பெற்ற ‘வெளியிடப்படாத அறிக்கையை” ஆவணப்படம் எடுத்துக் காட்டுகிறது.

இந்து யாத்ரீகர்கள் சென்ற ரயிலுக்கு தீ வைக்கப்பட்ட மறுநாள் கலவரம் தொடங்கியது. டசின் கணக்கானோர் அதில் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து நடந்த வன்முறையில் 1,000க்கும் மேற்பட்ட மக்களில் பெரும்பாலும் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.



அந்த வன்முறையில் ‘தண்டனை கிடைக்காத சூழலுக்கு” மோடியே ‘நேரடி பொறுப்பு” என்று வெளியுறவு அலுவலக அறிக்கை கூறுகிறது.

2005ஆம் ஆண்டில், ‘மத சுதந்திரத்தின் கடுமையான மீறல்களுக்கு” பொறுப்பா கக் கருதப்படும் வெளிநாட்டு அதிகாரிக ளின் நுழைவைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் மோடிக்கு அமெரிக்கா விசா மறுத் தது.

இந்த விவகாரத்தில் நரேந்திர மோடி நீண்ட காலமாகவே தன் மீதான குற்றச் சாட்டுகளை நிராகரித்து வந்ததுடன் கலவரத்திற்கும் அவர் மன்னிப்பு கேட்க வில்லை. 2013இல், உச்ச நீதிமன்ற குழுவும் அவர் மீது வழக்குத் தொடர போதுமான ஆதாரங்கள் இல்லை என்று கூறியது.

### பிபிசி அழைப்பை நிராகரித்த அரசு

இந்த ஆவணப்படத்திற்கு பதிலளிக்க இந்திய அரசுக்கு உரிமை வழங்கப்பட்டதாகவும் ஆனால் அது நிராகரிக்கப்பட்டதாகவும் பிபிசி கடந்த மாதம் கூறியது.

‘அந்த ஆவணப்படம் ‘கடுமையாக ஆராயப்பட்டது” என்றும், ‘பரந்த அளவிலான கருத்துக்கள், சாட்சிகள்” மற்றும் நிபுணர்கள் அதற்காக அணுகப்பட்டனர். பாஜகவில் உள்ளவர்களின் பதில்கள் உட்பட பல தரப்பினரின் கருத்துக்களை வழங்கியுள்ளோம்” என்றும் பிபிசி குறிப்பிட்டிருந்தது.

### புதிய விஷயமல்ல

அரசாங்கத்தை விமர்சிக்கும் அமைப்புகளை குறி வைப்பது இந்தியாவில் அசாதாரணமான விஷயம் அல்ல.

2020ஆம் ஆண்டில், ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் அதன் இந்திய நடவடிக்கைகளை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்போது, மனித உரிமை அமைப்புகளுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக அந்த அமைப்பு குற்றம்சாட்டியது.

மற்ற உள்ளூர் அரசு சாரா அமைப்புகளுடன் சேர்ந்து குழந்தைகள் கல்வி, பெண்ணுரிமைக்காக குரல் கொடுத்து வரும் ஆக்ஸ்பாம் அமைப்பின் அலுவலகத்திலும் கடந்த ஆண்டு சோதனை நடத்தப்பட்டது.

2021ஆம் ஆண்டில் அரசாங்கத்தைப் பற்றி எதிர்மறையான செய்திகளை வெளியிட்ட பின்னர், வருமான வருத்துறை அதிகாரிகள் நான்கு ஊடகங்களில் சோதனை நடத்தியதாக எடிட்டர்ஸ் கில்ட் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது.

ரிப்போர்ட்டர்ஸ் வித்தவுட் பார்டர்ஸ் என்ற லாப நோக்கமற்ற குழுவின் கூற்றுப்படி, நரேந்திர மோடி மத்தியில் ஆட்சிக்கு வந்ததில் இருந்து பத்திரிகை சுதந்திரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

அந்த குழுவின் உலக பத்திரிகை சுதந்திர குறியீடு பட்டியலில் இடம்பிடித்துள்ள 180 நாடுகளில் இந்தியா 150வது இடத்தைப் பிடித்துள்ளது, இது 2014ஆம் ஆண்டில் இருந்து 10 இடங்கள் குறைந்த நிலையாகும். (பிபிசி)

# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி மட்டக்களப்பில் சனியன்று போராட்டம்!

மட்டக்களப்பு, பெப். 16

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குங்கள் என்ற தொனிப்பொருளிலான மக்கள் போராட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நடைபெறவுள்ளதாகவும், அதில் ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ் ஊடக அமையம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் சங்கம் மற்றும் தெற்கு ஊடக அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இப்போராட்டத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு தங்களது ஆதரவுகளை வழங்கி படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைப்பதற்கு ஒத்துழைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (அ)

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டபின்னரே தேர்தல் நடக்கும்!

## இராஜாங்க அமைச்சர் செஹான்

கொழும்பு, பெப். 16

நிதி நெருக்கடிக்கு மத்தியில் பணத்தை அச்சிட்டு தேர்தலை நடத்தினால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை உரிய காலப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். பொருளாதார நெருக்கடிக்கு ஒப்பீட்டளவில் தீர்வு கண்டவுடன் தேர்தலை நடத்துவது அரசாங்கத்தின் பிரதான இலக்காக உள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும்,தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க தேர்தல்கள் ஆணைக்குழு கோரும் பெருந்தொகையான நிதியை ஒதுக்க முடியாத நிலை காணப்படுகிறது. பல மில்லியன் கணக்கான நிதியை ஒரே கட்டத்தில் ஒதுக்கும் போது அரச சேவைகளுக்கு தேவையான நிதியை ஒதுக்குவதில் பாதிப்பு ஏற்படும்.

நிதி நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலுக்கு நிதி ஒதுக்கினால் அரச சேவையாளர்களுக்கு சம்பளம் மற்றும் நலன்புரி சேவைகளுக்கு நிதி ஒதுக்குவது சிக்கலாகும். அது சமூக கட்டமைப்பில் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும்.

அரசாங்கம் என்ற ரீதியில் தற்போது மக்களின் அடிப்படை தேவைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. ஒரு மாதத்துக்கு தேவையான அரச செலவுகளை ஈடுசெய்வதற்கு பாரிய சிக்கல்களை எதிர்கொண்டுள்ள பின்னணியில் நாணயம் அச்சிட்டு தேர்தலை நடத்தினால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதில் பாதிப்பு ஏற்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை மார்ச் 31 ஆம் திகதிக்குள் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். கடன் குறித்து வெள்ளிக்கிழமை சர்வதேச நாணய நிதியம்,உலக வங்கி மற்றும் இந்தியா கூட்டிணைந்து நடத்தும் வட்டமேசை மாநாடு இலங்கைக்கு சாதகமாக அமையும்.

பொருளாதார நெருக்கடிக்கு ஒப்பீட்டளவில் தீர்வு கண்டவுடன் தேர்தலை நடத்துவது அரசாங்கத்தின் பிரதான இலக்காக உள்ளது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் தேர்தலை நடத்தினால் பொருளாதார பாதிப்பு மேலும் பாதிப்பு ஏற்படும் போது அதற்கு யார் பொறுப்பு கூறுவது - என்றார். (ஐ)

# திரிபோஷா வழங்குவதில் தொடர்ந்தும் இழுபறிநிலை

கொழும்பு, பெப். 16

சோளத்தில் அடங்கியுள்ள அப்லடொக்சின் அளவில் பிரச்னை ஏற்பட்டுள்ள காரணத்தினால் 03 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு திரிபோஷா வழங்குவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்துள்ளதாக பல ஆய்வுகளில் தெரியவந்துள்ள நிலையில் இந்த விடயம் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்னவிடம் வினவியபோது, 03 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான திரிபோஷா உற்பத்திக்கு ஒரு சதவீதத்திற்கும் குறைவாக அப்லடொக்சின் அடங்கியுள்ள சோளத்தை பயன்படுத்த வேண்டும் என்ற பரிந்துரையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அவ்வாறான சோளச் செய்கையை கண்டறிவதிலும் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள சதவீதங்களை மாற்றியமைப்பதற்காக சுகாதார அமைச்சு மற்றும் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன சுட்டிக்காட்டினார். (அ)

# பஸ் சில்லுக்குள் சிக்கி 17வயது இளைஞன் பலி!

கொழும்பு, பெப். 16

எம்பிலிபிட்டிய - இரத்தினபுரி வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பஸ் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் பஸ்ஸில் பயணித்த குறித்த இளைஞர் உயிர் தப்ப வெளியே பாய்ந்தபோது பஸ் சில்லில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் 17 வயதான இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கம் இவ் விபத்துக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ் விபத்து குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

கல்வி tv CHANNEL-1

16.02.2023
வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

16.02.2023
வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஆப்பிழுத்த குரங்கின் நிலை இன்று ஜனாதிபதி ரணிலுக்கு

## ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டு



மட்டக்களப்பு, பெப். 16

**உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது ஜனாதிபதிக்கு ஆப்பிழுத்த குரங்கின் கதைபோல அமைந்துவிட்டதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

தற்போதைய நிலையில் தேர்தலை நடத்தினாலும் ஜனாதிபதிக்கும் அவரது கட்சிக்கும் ஆபத்து உள்ளது. நடத்தாவிட்டாலும் ஆபத்து இருக்கிறதென அவர் மேலும் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் நகர சபை மற்றும் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்களை அறிமுகம் செய்து ஏறாவூர்ப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்தத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற விவகாரத்தில் தாங்கள் ஏனை கட்சிகளுடன் இணைந்து அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றோம். தேர்தலை நடத்துவதற்காக எதிர்தரப்பிலுள்ள ஏனைய நேச சக்திகளுடன் சேர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றோம்.

இதில் எந்த விட்டுக்கொடுப்பிற்கும் இடமில்லை. ஏனென்றால் ஒரு ஜனநாயக நாட்டில் கோடிக்கணக்கான பணத்தை எத்தனையோ விடயங்களுக்கு செலவிடும் அரசாங்கம் தேர்தல் நடத்துவதற்கு மட்டும் நிதி இல்லை என்ற நொண்டிச் சாட்டை சொல்லித் தேர்தலை இழுத்தடிப்புச் செய்வது நிச்சயமாக அவர்களுக்கு ஆபத்தான விடயமாகும்.

தேர்தலை நடத்துவதன் மூலம் தான் ஜனாதிபதிக்கு இருக்கின்ற கொஞ்ச நம்பத்தைன்மையையாவது பாதுகாத்துக் கொள்வேண்டுமென எதிர்பார்க்கின்றோம். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பது சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டுக்கட்சி என்று ஜனாதிபதிக்குத் தெரியும். இருந்த போதிலும் நாங்கள் ஜனாதிபதியுடன் தேவையற்ற முரண்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதில்லை.

தற்போதைய ஜனாதிபதி எமது அரசாங்கத்தில் பிரதமராகவும் இருந்தவர். அரசியலில் நீண்ட காலமாக தனக்கு ஜனாதிபதி பதவி கிடைக்குமா கிடைக்குமா என்று இலவுகாத்த கிளிபோல இருந்தவருக்கு இப்போது ஜனாதிபதி பதவி கிடைத்திருப்பது எமக்கும் சந்தோஷம். ஆனால் அவர் வங்குரோத்து நிலைக்கு வந்து தேர்தலை இழுத்தடிப்பது அவருக்கும் சங்கடமான நிலைதான். இவ்வளவு தூரம் வந்துவிட்ட விவகாரத்தை இனியும் இழுத்தடிப்பது சிரமம்தான். எனினும் தேர்தலை நடத்துவதன் மூலம் சந்திக்கின்ற ஆபத்தைவிட நடத்தாமல் இருப்பதனால் ஏற்படும் ஆபத்திற்கு முகம் கொடுக்க முடியும் என்ற அசட்டுத் தைரியம் ஜனாதிபதிக்கு இருப்பதுபோலவே தெரிகிறது-என்றார். (அ)

# துருக்கி பூகம்பத்தில் உயிர்நீத்தோருக்கு கல்முனை மாநகர சபையில் அனுதாபம்



அம்பாறை, பெப். 16

துருக்கி மற்றும் சிரியா நாடுகளில் ஏற்பட்ட பூகம்பத்தினால் உயிரிழந்த மக்களுக்காககல்முனை மாநகரசபையில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் 59ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல், மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றபோது இதற்கான பிரேரணையை முதல்வர் சமர்ப்பித்திருந்தார். இதனை மாநகர சபை உறுப்பினர் எஸ். சந்திரசேகரம் இராஜன் வழிமொழிந்து ஆமோதித்ததுடன் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதன்போது உரை யாற்றிய முதல்வர், அண்மையில் துருக்கி மற்றும் சிரியா நாடுகளில் ஏற்பட்ட பாரிய நில அதிர்வினால் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது. இதுவரை 40 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் உயிரிழந்திருக்கின்றனர். அது ஒரு இலட்சம் வரை அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்படுகிறது. இப்பேரழிவால் நிர்க்கதியடைந்திருக்கும் மக்களின் துயரங்களில் நாமும் பங்கேற்கிறோம்.

இந்த பேரனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் உறவுகளுக்கு கல்முனை மாநகர மக்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பவும் அந்த நாடுகள் மீள் எழுந்து நிற்பதற்குமான சக்தியை எல்லாம் வல்ல இறைவன் வழங்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறோம்- என்றார்.

அத்துடன் இந்த அனுதாபப் பிரேரணையை இரு நாடுகளினதும் தூதரகங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் சபை செயலாளரை முதல்வர் கேட்டுக்கொண்டார்.(அ-06)

# அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரியாக இஸ்ஸதீன் கடமையேற்பு



மட்டக்களப்பு, பெப். 16

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரியாக பொத்துவிலைச் சேர்ந்த வைத்தியர் அப்துல் மஜீத் முஹம்மது இஸ்ஸதீன் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பதவி கடந்த பல மாதங்களாக வெற்றிடமாக காணப்பட்டு வந்தது.

இந்த வெற்றிடத்தை பூர்த்தி செய்யும் வகையில் அவருக்கான இடமாற்றக் கடிதத்தை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தனவினால் வழங்கி வைக்கப்பட்டு நேற்று முன் தினம் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். (அ)

# மரத்திலிருந்து வீழ்ந்தவர் பரிதாபமாக பலி!

மட்டக்களப்பு, பெப். 16

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 35ஆம் கிராமம் கண்ணபுரம் பகுதியில், கடந்த 13ஆம் திகதி மாலை மரத்திலிருந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார் என வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்ப வறுமை நிலைமை காரணமாக மரம் ஏறி தொழில்செய்து வரும் குறித்த பகுதியை சேர்ந்த, 41 வயதுடைய 4 பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் குவேந்திரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

வேப்ப மரத்தில் ஏறி மரக்கிளைகளை வெட்டும் போதே, தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். சம்பவத்தின்போது வீட்டு உரிமையாளர், ஓட்டோவின் உதவியுடன் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு மரத்திலிருந்து வீழ்ந்தவரைக் கொண்டு சென்றபோதும், அவர் உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் உறுதிப்படுத்தின. (அ)

# காட்டு யானை தாக்கி வயோதிபர் உயிரிழப்பு!

திருமலை, பெப். 16

திருகோணமலை-தோப்பூரில் காட்டு யானை தாக்கி ஒருவர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் தோப்பூர் - அல்லைநகர் 09 எனும் கிராமத்தைச் சேர்ந்த குப்பைத்தம்பி அப்துல்காதர் என்ற 83 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார். குடியிருப்புக் காணியில் நுழைந்த காட்டு யானை வீட் டில் இருந்த தென்னை மரத்தை சாய்த்து சேதம் செய்துள்ளது. அப்போது சத்தம் கேட்டு வீட்டுக்கு வெளியே வந்த குப் பைத்தம்பி அப்துல் காதர் யானையை வெடி வெடித்து துரத்த முயற்சித்துள்ளார்.

இதன்போது கோபமடைந்த யானை அவரை வீட்டுக்குள் வைத்து தாக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார். அவருடன் அவரது மனைவி யும் வசித்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வாக்களிப்பை பிற்போட்டது அரசாங்கத்தின் இயலாமை!

## இம்ரான் மஹ்ரூப் சுட்டிக்காட்டு



திருமலை, பெப். 16

தபால் மூல வாக்களிப்பை பிற்போட்டது அரசாங்கத்தின் இயலாமையை காட்டுகிறது என திருகோணமலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச வேட்பாளர் தாலிப் அலியின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கத்தில் உள்ளவர்கள் தேர்தலுக்கும் மக்களுக்கும் பயப்படுகிறார்கள். இதன் மூலம் ஆட்சியைத் தொடர்ந்தும் தக்கவைக்க இந்த அரசாங்கம் முயற்சிக்கிறது.

பல வேட்பாளர்கள் இந்த தேர்தலில் அரச உத்தியோகத்தர்கள் சம்பளமற்ற விடுமுறையில் உள்ளதுடன் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுப்பினர் பதவியை இராஜினமா செய்து தேர்தலில் இறங்கியுள்ளார்கள்.

மக்கள் மத்தியில் சென்று தேர்தலுக்கு செல்லவேண்டும் என கோரிக்கை விடுக்கிறேன்.

100 ரூபாய்க்கு நெல்லை வாங்குதல் என்ற விடயம் வெரும் பேச்சு மாத்திரமே. விவசாயிகளை ஏமாற்றாது நெல் கொள்வனவு முறையாக இடம் பெற வேண்டும் என்பதை ஜனாதிபதியிடத்தில் வேண்டுகோளாக முன்வைக்கிறோம்-என்றார். (அ)

# சம்மாந்துறை பிரதேச சபை புதிய தவிசாளராக மாஹிர்



அம்பாறை, பெப். 16

சம்மாந்துறை பிரதேச சபையின் புதிய தவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட் சியின் பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் தெரி வாகியுள்ளார்.

சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னைய தவிசாளர் இரா ஜினாமா செய்தமையினால் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவுக்கான விசேட அமர்வு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் தலைமையில், சபா மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முன்தினம் இடம்பெற்றது.

இந்த அமர்வில் பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிரின் பெயர் மாத்திரமே தவிசாளர் பதவிக்காக முன்மொழியப்பட்டது. இதனால் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணனினால் ஏகமனதாக சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளராக ஐ.எல்.எம். மாஹிரின் பெயரை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 6 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட் சியின் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசிய கட்சியின் 2 உறுப்பி னர்கள் உள்ளிட்ட 10 உறுப்பினர்கள் சபைக்கு சமூகமளித்தனர்.

(அ)

ஈழநாடு



# பூமியை நெருங்கும் இராட்சத விண்கல்!



லண்டன், பெப். 16

**பூமியின் சுற்றுவட்டப்பாதையை ஒரு ராட்சத விண்கல் நெருங்கி வருவதாக வானியல் ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.**

199145 என்று பெயரிடப் பட்டுள்ள இந்த விண்கல் சுமார் ஒரு கி.மீ. அளவு அகலம் கொண்டது என்றும், 1,870 முதல் 4,265 அடிகள் வரை இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பொதுவாக 82 அடிகளுக்கும் குறைவான சிறிய விண்கற்கள் பூமிக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை.

இவை வளிமண்டலத்திற்குள் நுழையும் போதே எரிந்து சிதைந்துவிடும். ஆனால் தற்போது பூமியை நெருங்கி வரும் விண்கல், நமது பூமிக்கு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை உறுதியாக கூறமுடியாது என விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர்.

இது அடுத்த வாரம் பூமியின் சுற்றுவட்டப் பாதையில் மோதலாம் என்றும் வானியல் ஆய்வாளர்கள் சில தினங்களுக்கு முன்பு எச்சரித்து இருந்தனர்.

இந்த நிலையில் 199145 விண்கல் பூமிக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று விஞ்ஞானிகள் தற்போது தெரிவித்துள்ளனர்.

இந்த விண்கல் பூமியின் சுற்றுவட்டப்பாதையை இன்று கடந்து செல்லும் என்றும், இதனை தொலை நோக்கி மூலம் பார்க்க முடியும் என்று வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# மன்னரின் மனைவிக்கு கோவிட் தொற்று உறுதி!

### பக்கிங்ஹாம் அரண்மனை தகவல்!



லண்டன், பெப். 16

மன்னரின் மனைவியான கமிலாவுக்கு கோவிட் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது.

அவர் சளி அறிகுறிகளால் அவதிப்படுவதாகக் கூறப்படுகிறது, மேலும் ஒரு வாரத்திற்கான அவரது பொது ஈடுபாடுகளை ரத்து செய்துள்ளார்.

75 வயதான மன்னரின் மனைவி கமிலா, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெஸ்ட் மிட்லாண்ட்ஸ்க்கு திட்டமிடப்பட்ட பயணத்திலிருந்து ஏற்கனவே விலகிவிட்டார்.

அவருக்கு முன்பு கோவிட் இருந்தது மற்றும் முழுமையாக தடுப்பூசி போடப்பட்டதாக புரிந்து கொள்ளப்பட்டு, அவர் தற்போது நல்ல மனநிலையில் இருப்பதாகவும், ஓய்வில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

பக்கிங்ஹாம் அரண்மனை ஆரம்பத்தில் 'பருவகால நோய்' காரணமாக மன்னரின் மனைவி பயணத்தை ரத்து செய்வதாகக் கூறியது, ஆனால் அவர் தற்போது, கோவிட்க்கு நேர்மறை சோதனை செய்துள்ளார்.

மன்னரின் மனைவி கமிலா இதற்கு முன்பு சரியாக ஒரு வருடத்திற்கு முன்பு நேர்மறை சோதனை செய்தார்.

ஆனால், இந்த வாரம் மன்னர் சார்லஸின் நிகழ்வில் எந்த மாற்றமும் திட்டமிடப்படவில்லை என்று அரச வட்டாரங்கள் கூறுகின்றன. (அ)

# ஆபிரிக்காவில் புதிய வைரஸ்!

## 9 பேர் உயிரிழப்பு

லாகோஸ், பெப். 16

மேற்கு ஆபிரிக்காவின் கினியாவில் மெர்பர்க் என்னும் புதிய கொடிய வைரஸ் கண்டறியப் பட்டுள்ளது.

எபோலா, கோவிட் - 19 போன்று இதுவும் விலங்கிலிருந்து மனிதர்களுக்கு பரவும் தன்மை கொண்டது.

வெளவால்களிலிருந்து பரவும் மெர்பர்க் வைரஸ் நோய் 88 சதவிகித இறப்பு விகிதத்தை கொண்டுள்ளதுடன், மிகவும் ஆபத்தான நோய்க் கிருமியாகும். இது கடுமையான காய்ச்சலை அடிக்கடி இரத்தப்போக்குடன் ஏற்படுத்துகிறது.

மேலும் பல உறுப்புகளை பாதிப்படைய செய்து, உடலின் செயல் திறனைக் குறைக்கிறது.

இதுவரை 16 பேருக்கு அறிகுறிகள் பதிவாகியுள்ளன. மேலும் பரவாமல் தடுக்க கிட்டத்தட்ட 200 பேர் உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

உலக சுகாதார அமைப்பும் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையுடன் கலந்தாலோசித்து முழு ஊரடங்கு செயல்படுத்தப்பட்டு உள்ளது.

இது பிலோ வைரஸ் குடும்பத்தின் ஒரு பகுதியாகும். இதில் எபோலா வைரஸும் அடங்கும். இந்த நிலையில், தொற்று ஏற்பட்டு உயிரிழந்த 9 பேரின் மாதிரிகளை பரிசோதனை செய்ததில், அவர்களுக்கு மெர்பர்க் கிருமியின் பாதிப்பு ஏற்பட்டு இருப்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது.

மெர்பர்க் வைரஸ் தொற்றுக்கு இதுவரை எந்த வித சிகிச்சையோ தடுப்பூசியோ கண்டுபிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# உயிரிழந்தோர் 41,000 பேர்!



அங்காரா, பெப். 16

துருக்கி, சிரியாவை உலுக்கிய நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 41,232 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த வாரம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 35,418 பேர் பலியாகியுள்ளனர் என துருக்கி ஜனாதிபதி எர்டோகன் அறிவித்தார்.

இது ஒரு நூற்றாண்டில் நாட்டின் மிக மோசமான பேரழிவாகும்.

அதே நேரத்தில் சிரியாவில் இறப்பு எண்ணிக்கை 5,814 ஐ எட்டியுள்ளது.

தெற்கு துருக்கியை தாக்கிய வலுவான நிலநடுக்கங்களின் ஒன்பது நாட்களுக்குப் பிறகு இடிபாடுகளில் இருந்து உயிர் பிழைத்தவர்கள் மீட்கப்பட்டு வருகிறார்கள்.

நிலநடுக்கம் தாக்கி சுமார் 212 மணி நேரத்திற்குப் பிறகு, செவ்வாய்க்கிழமை பிற்பகுதியில் தென்கிழக்கு அதியமான் மாகாணத்தில் இடிபாடுகளில் இருந்து 77 வயதுடைய பெண் பாத்மா குங்கோர் உயிருடன் மீட்கப்பட்டார். (அ)

### 2024 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில்

# ட்ரம்ப்புக்கு போட்டியாளராக களமிறங்கும் இந்தியப் பெண்!



நியூயோர்க், பெப். 16

2024ஆம் ஆண்டுக்கான அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நிக்கி ஹாலே அறிவித்துள்ளார்.

இதனால் குடியரசுக் கட்சித் தலைவராக இவருக்கும், கட்சியின் சக தலைவரான முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் அடுத்த வருடம் நடக்கவுள்ளது. இத்தேர்தலில் மீண்டும் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப். குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட ட்ரம்ப் விருப்பம் தெரிவித்துள்ள நிலையில், இப்போது அதே கட்சியைச் சேர்ந்தவரும் ஐ.நாவுக்கான அமெரிக்க பிரதிநிதியாக இருந்த இந்திய வம்சாவளி பெண் நிக்கி ஹாலேயும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட போவதாக அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் பிரதான கட்சிகள் என்றால் ஜனநாயக கட்சி மற்றும் குடியரசு கட்சிகள்தான். ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பைடன் தற்போது அமெரிக்க ஜனாதிபதியாக உள்ளார். அடுத்த ஆண்டு அவரின் பதவிக்காலம் முடியவுள்ளதால் அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடக்கவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட விருப்பம் உள்ளவர்கள் கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெறவேண்டும்.

இரு கட்சிகள் சார்பிலும் நடக்கும் மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டு தங்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை தேர்ந்தெடுப்பார்கள். அந்த வகையில் குடியரசு கட்சி சார்பில் ட்ரம்ப் போட்டி என அறிவித்துள்ள நிலையில் இப்போது நிக்கியும் களத்தில் குதித்துள்ளார். இதனால் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் களம் இப்போதே சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

வீடியோ ஒன்றை வெளியிட்ட நிக்கி, "நான் நிக்கி ஹாலே. நான் வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறேன். நாட்டின் நிதி பொறுப்பை மீட்டெடுக்கவும், நமது எல்லையைப் பாதுகாக்கவும், நமது நாட்டை, நமது பெருமை மற்றும் நமது நோக்கத்தை வலுப்படுத்தவும் புதிய தலைமுறை தலைமை தேவைப்படும் நேரம் இது" என்று பேசியுள்ளார்.

51 வயதாகும் நிக்கி ஹாலே இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். இவரின் தந்தை அஜித் சிங் பஞ்சாப்பை பூர்வீகமாக கொண்டவர். முதலில் கனடாவில் குடியேறிய அஜித் சிங் அதன் பின் குடும்பத்துடன் அமெரிக்காவுக்கு இடம்பெயர்ந்துள்ளார். அமெரிக்காவின் தெற்கு கரோலினா பகுதியில் வசித்து வந்துள்ளனர். இதே தெற்கு கரோலினா மாகாண ஆளுநராக தனது 39 வயதில் பதவியேற்று அமெரிக்காவின் இளம் ஆளுநர் என்ற சாதனையை கடந்த 2011 இல் படைத்தார் நிக்கி ஹாலே. இரு முறை இம்மாகாண ஆளுநராக சிறப்பாக செயல்பட்ட நிக்கி, ட்ரம்ப் ஜனாதிபதியாக இருந்த போது 2017 ஜனவரி முதல் 2018 டிசெம்பர் வரை ஐ.நா சபைக்கான அமெரிக்க பிரதி நிதியாகப் பணியாற்றியுள்ளார். (அ)

# உளவு பலூன் விவகாரம்:

## சீனாவின் குற்றச்சாட்டை மறுக்கிறது அமெரிக்கா!

நியூயோர்க், பெப். 16

கடந்த ஆண்டில் 10 முறைக்கு மேல் அமெரிக்கா தனது வான்வெளியில் பலூன்களை பறக்கவிட்டதாக சீனாவின் வெளியுறவு அமைச்சகம் முன்வைத்த குற்றச்சாட்டை அமெரிக்கா மறுத்துள்ளது.

'அமெரிக்கா மற்ற நாடுகளின் வான்வெளியில் சட்டவிரோதமாக நுழைவது அசாதாரணமானது அல்ல' என்று சீனாவின் வெளியுறவு அமைச்சகத் தின் செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் கூறியிருந்தார்.

இந்தநிலையில், இந்தக் குற்றச்சாட்டை மறுத்து வெள்ளை மாளிகையில் இருந்து கருத்து தெரிவித்த செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி, நாங்கள் சீனாவின் மீது கண்காணிப்பு பலூன்களை பறக்கவிடவில்லை எனவும் சீன வான்வெளியில் நாங்கள் பறக்கும் வேறு எந்த கைவினையும் பற்றி தனக்குத் தெரியாது எனவும் கூறினார்.

அதேவேளை, இந்த வார இறுதியில் வட அமெரிக்க வான்வெளியில் பறந்த மூன்று பொருட்களை சுட்டு வீழ்த்துவதற்கான அமெரிக்காவின் முடிவு மிகவும் எச்சரிக்கையாக இருந்தது என்றும் கூறினார்.

இந்த பொருட்கள் வணிக விமானங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியது மற்றும் அமெரிக்க மக்களின் சிறந்த நலன்களுக்காக வீழ்த்தப்பட்டது என்று அவர் மேலும் கூறினார்.

சமீபத்தில் சீனாவில் இருந்து உளவு பார்த்ததாக சந்தேகிக்கப்படும் பலூன் ஊடுருவியதில் இருந்து அமெரிக்கா தனது வான்வெளியை மிகவும் உன்னிப்பாக ஆய்வு செய்து வருகிறது. (அ)



# பெங்களூர் அணியின் ஆலோசகராக சானியா

பெங்களூர், பெப். 16

டபிள்யூ. பி. எல். கிரிக்கெட் தொடரில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார் பிரபல ரென்னிஸ் வீராங்கனையான சானியா மிர்சா.

டபிள்யூ. பி. எல். தொடர் எதிவரும் மார்ச் 4 முதல் 26 வரை மும்பையில் உள்ள இரு மைதானங்களில் நடைபெறவுள்ளது. 22 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இந்நிலையில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் ஆலோசகராகப் பிரபல ரென்னிஸ் வீராங்கனையான சானியா மிர்சா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுபற்றி சானியா மிர்சா கூறியதாவது:

இந்த வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டபோது நான் ஆச்சரியமடைந்தேன். விளையாட்டை முதல் விருப்பமாகத் தெரிவு செய்யலாம். எத்தனை தடைகள் ஏற்பட்டாலும் விளையாட்டில் சாதிக்க முடியும் என்கிற நம்பிக்கைகளை அடுத்தத் தலைமுறை வீராங்கனைகளிடம் ஏற்படுத்துவேன் -என்றார்.

இந்த மாதத்துடன் டென்னிஸ் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக சானியா மிர்சா சமீபத்தில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மகளிர் உலகக் கிண்ணம்:

# பங்களாதேஷை வீழ்த்தியது ஆஸி.



கேப்டவுன், பெப். 16

பங்களாதேஷுக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் 8 விக்கெட்களால் நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா வெற்றியீட்டியது.

இதன் மூலம் இரண்டாவது நேரடி வெற்றியை ஈட்டிய அவுஸ்திரேலியா முதலாம் குழுவில் முதலாம் இடத்தை அடைந்துள்ளது. இலங்கை 2 வெற்றிகளை ஈட்டியுள்ளபோதிலும் நிகர ஓட்ட வேக அடிப்படையில் 2ஆம் இடத்தில் உள்ளது.

தென்னாபிரிக்காவில் மகளிர் இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டிகள் நடக்கின்றன. இதில் நேற்று பங்களாதேஷ் - அவுஸ்திரேலிய அணிகள் மோதின.

16 மாதங்களின் பின்னர் அவுஸ்திரேலிய அணியில் மீண்டும் இடம்பிடித்த ஜோர்ஜியா வெயர்ஹம் மிகத் திறமையாக பந்துவீசி பங்களாதேஷை கட்டுப்படுத்தியதுடன் அணித் தலைவி மெக் லெனிங் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி அவுஸ்திரேலியாவின் வெற்றியை உறுதிசெய்தார்.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த பங்களாதேஷ் 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றது.

அணித் தலைவி நிகார் சுல்தானா, ஷொர்னா அக்தர் ஆகிய இருவரும் 4ஆவது விக்கெட்டில் பகிர்ந்த 44 ஓட்ட இணைப்பாட்டமே பங்களாதேஷ் சுமாரான மொத்த எண்ணிக்கையைப் பெற உதவியது.

நிகார் சுல்தானா 7 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 57 ஓட்டங்களையும் ஷொர்னா அக்தர் 12 ஓட்டங்களையும் பெற்றனர். அவர்கள் இருவரைவிட வேறு எவரும் இரட்டை இலக்க எண்ணிக்கையைப் பெறவில்லை.

அவுஸ்திரேலிய பந்துவீச்சில் ஜோர்ஜியா வெயார்ஹம் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் டார்சி ப்றவுண் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

108 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 18.2 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 111 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

மொத்த எண்ணிக்கை 9 ஓட்டங்களாக இருந்தபோது அனுபவசாலியான பெத் மூனி 2 ஓட்டங்களுடன் வெளியேறினார். அதன் பின்னர் 2ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த அலிசா ஹீலியும் மெக் லெனிங்கும் 69 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை நல்ல நிலையில் இட்டனர்.

அலிஸா ஹீலி 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பின்னர் லெனிங், ஏஷ்லி கார்ட்னர் ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 3ஆவது விக்கெட்டில் 33 ஓட்டங்களைப் பகிர்ந்து அவுஸ்திரேலியாவின் வெற்றியை உறுதிசெய்தனர்.

மெக் லெனிங் 48 ஓட்டங்களுடனும் ஏஷ்லி கார்ட்னர் 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பங்களாதேஷ் பந்துவீச்சில் ஷொர்ணா அக்தர் 12 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் மரூபா அக்தர் 19 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



# மூவகை கிரிக்கெட்டிலும் முதலிடத்தில் இந்திய அணி!

டுபாய், பெப். 16

டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்து அசத்தியுள்ளது ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி. இதன்மூலம் மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

சமீபத்தில் பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என வென்றது இந்திய அணி. தற்போது, 4 டெஸ்ட்கள் கொண்ட ஆஸி.க்கு எதிரான டெஸ்ட் தொடரில் 1-0 என முன்னிலை பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3-1 என இந்திய அணி வென்றாலே உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியின் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றுவிடும். இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட், டில்லியில் நாளை தொடங்குகிறது.

இந்நிலையில்நேற்று வெளியிடப்பட்டுள்ள அணிகளுக்கான டெஸ்ட் தரவரிசையில் இந்திய அணி முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது.

இதையடுத்து டெஸ்ட், ஒருநாள், இருபது - 20 என மூன்றிலும் முதல் அணியாக இந்திய அணி உள்ளது.

# உதைபந்து வரைபடத்தில் முக்கியம் பெறும் சவூதி!




ரியாட், பெப். 16

பிபா கழக உலகக் கிண்ணப் போட்டி சவூதி அரேபியாவில் டிசெம்பர் 12 முதல் 22 வரை நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. ஏழு அணிகள் இப் போட்டியில் பங்கேற்கவுள்ளன.

சமீபத்தில் நடைபெற்ற பிபா கழக உலகக் கிண்ணப் போட்டியை ரியல் மட்ரிட் அணி வென்றது. 2030 உதைபந்தாட்ட உலகக் கிண்ணப் போட்டியை நடத்த சவூதி அரேபியா ஆர்வம் காண்பித்து வரும் நிலையில் பிபா கழக உலகக் கிண்ணப் போட்டி இந்த வருடக் கடைசியில் அப் பகுதியில் நடைபெறவுள்ளது.

போர்த்துக்கல் உதைபந்தாட்ட நட்சத்திரம் கிறிஸ்ரியானோ றொனால்டோ, சவூதி அரேபிய உதைபந்தாட்ட கழகமான அல் நசார் அணியில் சமீபத்தில் இணைந்தார். இதனால் உதைபந்தாட்ட வரை படத்தில் சவூதி அரேபியாவுக்கு முக்கியத்துவம் கிடைத்து வருகிறது.

பிரேஸில், ஜப்பான், ஐக்கிய அரபு அமீரகம், கத்தார், மொராக்கோ ஆகிய நாடுகள் மட்டுமே பிபா கழக உலகக் கிண்ணப் போட்டியை இதற்கு முன்பு நடத்தியுள்ளன. ஆறு கண்டங்களிலும் சம்பியன் பட்டம் வென்ற அணிகள், போட்டி நடத்தும் நாட்டின் அணி என ஏழு அணிகள் இப் போட்டியில் கலந்துகொள்கின்றன. 2025 முதல் இப்போட்டியில் 32 அணிகள் கலந்துகொள்ளும் எனக் கடந்த டிசெம்பர் மாதம் அறிவிக்கப்பட்டது.

# இந்திய அணியின் சர்ச்சைகளை வெளியிட்ட தெரிவு குழு தலைவர்

மும்பை, பெப். 16

இந்திய கிரிக்கெட் அணியின் தெரிவுக் குழுத் தலைவர் சேத்தன் சர்மா தனியார் தொலைக்காட்சிக்கு அளித்து நேர்காணலில் கங்குலி - கோலி மோதல், இந்திய அணி தேர்வு, வீரர்களின் உடல் தகுதிக்கு ஊக்க மருந்து எடுத்தது குறித்து கருத்தை வெளியிட்டுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்திய கிரிக்கெட் சபையின் தலைவராக இருந்த கங்குலி - கோலி இடையே மோதல்கள் இருந்து வந்தன என்று ஊடகங்களில் கடந்த சில ஆண்டுகளாகவே செய்திகள் வெளியாகின. அதனை உறுதி செய்யும் வகையில் கோலி தனது தலைமை பதவியை இராஜிநாமா செய்தார்.

இந்தச் சூழலில் தனியார் தொலைகாட்சிக்கு சேத்தன் சர்மா அளித்த இரகசிய பேச்சு தற்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

அதில் சேத்தன் சர்மா கூறியதாவது, “கங்குலிக்கு விராட் கோலியின் போக்கு பிடிக்கவில்லை. கோலியும் கங்குலியும் இணக்கமாக இருந்ததில்லை.



அதேவேளையில் ரோஹித் சர்மாவை தலைவராக்கவும் கங்குலி விரும்பவில்லை. கோலி கிரிக்கெட்டைவிட தன்னை பெரிய ஆளாக நினைத்தார்.

மேலும் அவர் இந்திய கிரிக்கெட் சபையுடன் இணக்கமான போக்கை கடைப்பிடிக்கவில்லை. அவர் இல்லையென்றால் இந்திய கிரிக்கெட் இருக்காது என்று நினைத்தார். ஆனால், அவ்வாறு நடந்ததா? அவர் சென்ற பிறகும் பல இந்திய வீரர்கள் சிறப்பாக விளையாடினர். இருபது - 20 தலைமை பதவியை கோலி இராஜி நாமா செய்யும்போது, நீங்கள் யோசித்து முடிவெடுக் கலாம். உங்கள் முடிவை மறுபரிசீலனை செய்யலாம் என்று கூறினோம்.

கங்குலியும் தலைமை பதவியை இராஜிநாமா செய்ய வேண்டாம் என்று கூறினார். ஆனால், கோலி இந்திய கிரிக்கெட் சபை எந்த வாய்ப்பையும் தனக்கு வழங்கவில்லை என்று ஊடகங்களிடம் கூறினார். இதனால் இது இந்திய கிரிக்கெட் சபை எதிர் கோலியாக வெளியில் பேசப்பட்டது. எங்களுடன் ரோஹித் சர்மா, ஹார்திக் பாண்ட்யா உள்ளிட்ட 5 இந்திய வீரர்கள் மிக நெருக்கமாக உள்ளனர்.

ஆனால், கோலி அவ்வாறு இருந்ததில்லை. இதுவே கோலியை தலைமைப் பதவியிலிருந்து நீக்க எங்களுக்கு சாதகமாக இருந்தது. காயமடைந்த இந்திய வீரர்கள் சிலர் அணியில் இடம்பெற உடல்தகுதி பெறாத நிலையிலும், ஊக்க மருந்து எடுத்துக் கொண்டு அணிக்கு திரும்பினர்.” என்று பேசி இருக்கிறார்.

# கோழைத்தனமாக நடக்கின்றது அரசு!

## எதிர்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 16

**தேர்தலை ஒத்திவைப்பதற்கும் நடத்தாமல் இருப்பதற்கும் அரசாங்கம் கோழைத்தனமான நடவடிக்கை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.**

மக்களின் இறையாண்மையுடன் விளையாடும் அரசாங்கத்துக்கு நெருக்கடியான தருணம் வந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக ஒன்றிணையவேண்டிய தருணம் வந்துவிட்டது.

தபால் மூல வாக்களிப்பிற்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்குப் பணம் ஒதுக்குவதில்லை என்று முடிவு வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

22ஆவது முறையாக தேர்தலை ஒத்திவைக்கும் மற்றொரு கோழைத்தனமான முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

தேர்தலை ஒத்திவைக்க சதி செய்யும் அனைவருக்கும் எதிராக தொடர்ந்து சட்ட நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு எதிராக நீதியை நிலைநாட்டப் பாடுபடுவோம்-என்றார். (அ)

# தலைக் கவசத்தினால் தாக்கி ஒருவர் கொலை

கொழும்பு, பெப். 16

வீதியில் பயணித்தபோது ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக இளைஞர்கள் குழுவொன்று தலைக்கவசத்தால் தாக்கியதில் ஒரு பிள்ளையின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார் என வெலிப்பன்ன பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிப்பன்ன, கல்மத்த பிரதேசத்தில் வசிக்கும் 34 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான ரங்கவிராஜ் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார் என பொலிஸார் கூறினர்.

வெலிப்பன்ன கல்மத்த பிரதேசத்தில் வீதியொன்றில் பயணித்த 16 வயதுடைய இளைஞர்கள் சிலருடன் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதைத் தொடர்ந்து, தலைக்கவசத்தால் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

குறித்த நபர் பலத்த காயமடைந்து அளுத்கம பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கொலைச் சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் ஏனைய சந்தேக நபர்கள் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனவும் அவர்களைக் கண்டுபிடிக்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# மாவனல்லை பிரதேச சபையின் தலைவர் நோயல் பதவி நீக்கம்!

கொழும்பு, பெப். 16

மாவனல்லை பிரதேச சபைத் தலைவர் நோயல் ஸ்டீபனை அந்தப் பதவியில் இருந்து தற்காலிகமாக நீக்கி சப்ரகமுவ மாகாண ஆளுநர் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இதன்படி, மாவனல்லை பிரதேச சபையின் தலைவர் பதவிக்கு உப தலைவரான கோரலே கெரடா பியதிஸ்ஸ நியமிக்கப்பட்டுள்ளார்.

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை சட்டத்தின் 185(3) (அ) (i) பிரிவின்படி ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய மேற்படி வர்த்தமானி அறிவித்தலை சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிங்கிரி கொப்பேகடுவ வெளியிட்டுள்ளார்.

நோயல் ஸ்டீபன் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார். (அ)

# நாணய நிதியத்துடன் இணங்காமல் எவராலுமே ஆட்சி செய்ய முடியாது!

## அமைச்சர் பந்துல குணவர்த்தன



கொழும்பு, பெப். 16

கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் மார்ச் இறுதிக்குள் இணக்கப்பாட்டை எட்டுவதற்கே முயற்சிக்கின்றோம். சீனா அதற்கான நிதி உத்தரவாதத்தை வழங்கும் என்று எதிர்பார்க்கின்றோம். அவ்வாறன்றி நாணய நிதியத்துடன் இணக்கப் பாட்டை எட்டாமல் எவராலும் நாட்டை ஆட்சி செய்ய முடியாது என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடன் மறுசீரமைப்புக்கள் இன்றி கடன் உதவியை பெற முடியாது என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் காணப்படுகிறது. இவ்விடயம் தொடர்பில் நிபுணத்துவம் மிக்க அதிகாரிகள் இராஜதந்திர ரீதியில் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதற்கமைய இந்தியா மற்றும் பாரிஸ் கிளப் என்பன சாதகமான பதிலை வழங்கியுள்ளன. அதே போன்று சீனாவும் 2 வருட கால அவகாசம் என்ற சாதகமான பதிலை வழங்கியுள்ளது.

எவ்வாறிருப்பினும் இந்த கால அவகாசம் போதாது என்று சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. ஜனாதிபதி , திறைசேரி மற்றும் மத்திய வங்கி அதிகாரிகள் எவ்வாறேனும் மார்ச் இறுதிக்குள் இதனை நிறைவடையச் செய்வதற்கு பெரும்பாடுபட்டு வருகின்றனர். இந்த முயற்சி வெற்றியடையாமலிருக்க முடியாது.

மாறாக வெற்றியடையாவிட்டால் யார் வந்து எந்த வழியில் நாட்டை முன்னேற்றுவதாகக் கூறினாலும் அதனை செய்ய முடியாது. இந்த வேலைத்திட்டங்களை வெற்றியடைச் செய்யாமல் எவராலும் நாட்டை ஆட்சி செய்ய முடியாது - என்றார். (ஐ)

# போதை மாத்திரைகளுடன் சிக்கிய பதுளை வைத்தியர்

கொழும்பு, பெப். 16

145 மாத்திரைகளை வைத்திருந்த பதுளை வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

குறித்த வைத்தியர் பதுளை மயிலகஸ்தென்னவில் உள்ள தனது தனியார் வைத்திய நிலையத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர், யுவதிகளுக்கு போதைப்பொருள் விற்பனை செய்வதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், சந்தேகநபர் பயன்படுத்திய காரொன்றும் பதுளை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

# அதிவேக நெடுஞ்சாலையில் வாகன விபத்தில் இருவர் பலி

கொழும்பு, பெப். 16

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் 35.9 கிலோமீற்றர் அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னதுவையிலிருந்து கொட்டாவ நோக்கிச் சென்ற லொறியொன்று, இயந்திரக் கோளாறு காரணமாக கடும் புகை மூட்டத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், லொறியை வீதியோரத்தில் நிறுத்திவிட்டு சாரதி வாகனத்தைச் சோதனை செய்து கொண்டிருந்தார்.

இதன்போது, கொட்டாவை நோக்கிச் சென்ற காரொன்று நிறுத்தப்பட்டிருந்த லொறியின் பின்புறம் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்த காரின் சாரதி, அவரது தந்தை, சித்தப்பா மற்றும் அத்தை ஆகியோர் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சாரதியின் தந்தையும் சித்தப்பாவும் உயிரிழந்துள்ளனர்.

திருக்கோவில் பிரதான வீதியில் வசிக்கும் 75 வயது மற்றும் 70 வயதுடையவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சடலங்கள் நாகொட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. (அ)

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கும் வரப்பிரசாதங்களை இரத்து செய்வோம்

## தேசிய மக்கள் சக்தி கூறுகிறது



கொழும்பு, பெப். 16

1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஜனாதிபதியின் உரிமைச் சட்டத்தின் ஊடாக முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைவர்கள் அனுபவிக்கும் சலுகைகள் தமது அரசாங்கத்தின் கீழ் இரத்து செய்யப்படும் என தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் பொதுமக்கள் பல இன்னல்களை எதிர்கொண்டு வரும் நிலையில் முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைவர்களுக்கு ஆடம்பர வாழ்க்கை வாழ்வதாக அக்கட்சியின் உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பொது மக்களுடன் ஒப்பிடுகையில், இவர்களுக்கு எந்த விதமான நிதிச் சிக்கல்களும் இல்லாத இந்த நிலையில் அவர்களுக்கு வழங்கப்படும் தொகைகள் ஆண்டுதோறும் அதிகரிக்கப்படுகிறது.

குறித்த சட்டத்தின் மூலம் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வாடகை இல்லா வசிப்பிடம், மாதாந்த கொடுப்பனவு, போக்குவரத்து வசதிகள் மற்றும் ஓய்வூதியம் போன்றவை வழங்கப்படுகின்றன-என்றார். (அ)

## மீளவும்...

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "தேர்தல் அறிவிக்கப்பட்டு அதற்கான வேலைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. இந்நிலையில் தபால் மூல வாக்களிப்பு நடத்துவ தற்கான செயல்பாடுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தற்போதைய ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்படாத ஒருவர் என்ப தோடு கடந்த தேர்தல்களில் பல தடவை ஜனாதிபதியாகப் போட்டி யிட்டு மக்களால் தோற்கடிக்கப்பட்ட வர்.

இந்நிலையில் தான் ஒரு தடவை என்றாலும் மக்களால் தேர்வு செய் யப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் தான் உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போட அவர் நினைக்கின்றார். உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போட்டு அதன் மூலம் தான் மீண்டும் ஜனாதிபதியாக வர வேண் டும் என்றும், அதற்காக தற்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களம் இறங்கியுள்ள வேட்பாளர்களைக் கொண்டு அடிமட்ட சிங்கள மக்களி டம் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள ரணில் முனைகின்றார்" என்றார்.

## எதிர்கால...

இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உலகப் பொருளாதாரத்தில் இலங்கை அங்கத்துவம் வகிக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும். அவ்வாறு செய்தால் மாத்திரமே டொலர் வருமா னத்தை அதிகரித்துக் கொள்ள முடியும். உலகில் ஒரு பங்காளியாகவே இலங்கை யைக் கட்டியெழுப்ப முடியும். எமது இந்த வேலைத்திட்டங்கள் தொடர்பில் மக்களுடன் கலந்துரையாட எதிர்பார்க் கின்றோம்.

அரச நிறுவனங்களின் செலவுகளைக் கட்டுப்படுத்தல், இலங்கை விமான சேவை போன்றவற்றை தனியார் மயப் படுத்தல் உள்ளிட்ட பல்வேறு பரிந் துரைகளை எமது பொருளாதார திட் டத்தில் உள்ளடக்கியுள்ளோம். அத் தோடு தனியார் நிறுவனங்களுக்கு முத லீட்டு வாய்ப்புக்கள் அதிகரிக்க வேண்டும்.

மேலும் மீள் புதுப்பிக்கத்தக்க மின் சக்தி துறையை மேம்படுத்துவதில் அவதானம் செலுத்த வேண்டும். மீள் புதுப்பிக்கத்தக்க மின் சக்தி மூலம் அதிகளவு டொலர் வருமானம் ஈட்டும் நாடுகளுக்கு சிறந்த உதாரணம் பூட் டான், நேபாளம் என்பனவாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால், அதன் அனைத்து நிபந்தனை களையும் அங்கீகரிக்க முடியாது. சர்வதேச நாணய நிதியம் நாட்டின் அரசி யல் நிலைவரம் தொடர்பில் கவனத்தில் கொள்ளாது. ஆனால், ஸ்திரமான அரசாங்கம் இருந்தால் தொடர்ந்தும் பயணிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட இணக்கப்பாடு என்ன என்பது தொடர்பில் இன்னும் எமக்குத் தெரியாது. அதனை அரசாங்கம் வெளிப் படுத்த வேண்டும். பாராளுமன் றத்தில் அரசாங்கத்தின் நிதி பற்றிய குழுவுக்கு மீண்டும் அதே உறுப்பினர்கள் நியமிக் கப்பட்டால், இது தொடர்பான நட வடிக்கைகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வோம்.

சர்வதேச நாணய நிதியம் பரிந்து ரைத்துள்ள வரிக்கொள்கையை ஒரு போதும் எம்மால் ஏற்றுக் கொள்ள முடி யாது. சுமார் 4 - 5 இலட்சம் மாத வருமானம் பெறுவர்களுக்கு கூட 52 சதவீத வரியை அறவிட முடியும்.

அதற்கான மாற்று வேலைத்திட்டம் எம்மிடமுள்ளது. எமது இந்த பொருளா தார வேலைத்திட்டத்தை நாம் சர்வதேச நாணய நிதியத்திடமும் சமர்ப்பித்துள் ளோம். எமது வேலைத்திட்டங்களுடன் இணக்கப்பாடு எட்டப்பட்டால் தொடர்ந் தும் பயணிக்க முடியும் - என்றார். (ஐ)

## சலுகைகள்...

விவகார அமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுக்கு இலங்கை விண்ணப்பித்துள்ளமைக்கு சீனா தனது ஆதரவை வெளியிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## வடக்கிலிருந்து...

இந்தியாவுக்கு விற்க முடியும் என்று நம்புகிறோம்.

இலங்கையின் பொரு ளாதார மீட்சி திட்டத் தின் முக்கிய பகுதி வடக்கு மாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களை அபிவிருத்தி செய்வதில் தங்கியுள்ளது. இங்கிருந்து, எல்லை தாண்டிய மின்சார பரிமாற்ற கேபிள் மூலம் மின்சாரத்தை தென்னிந்தியாவுக்கு கொண்டு செல்ல முடியும் என்று நம்புகிறோம் என்று அவர் சர்வதேச செய்தி நிறுவனமான ரொய்ட்டருக்கு அளித்த கருத்தில் தெரிவித்துள்ளார். (ஐ)

## 66வீதம்...

இந்தப் பிரேரணை ஜனவரி 2ஆம் திகதி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டது.

ஆனால், இந்தக் கட்டண உயர்வுக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வின் அனுமதி தொடர்ந்து மறுக்கப்பட் டதுடன் கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் அதன் உறுப்பினர்கள் பலர் இராஜினாமா செய்தனர். இப்போது இருப்பவர்கள் இரு தடவைகளில் நிய மிக்கப்பட்டவர்கள் என்பதும் குறிப் பிடத்தக்கது.

இதேசமயம், புதிய கட்டண திருத் தத்தின்படி,

60 அலகுகளுக்கு குறைந்த 0 - 30 வரையான அலகுகளுக்கு வலு கட்ட ணமாக 30 ரூபாயாகும். நிலையான கட்டணம் 400 ரூபாயாகும். இதே போல், 31 - 60 வரையான அலகுகளுக்கு வலு கட்டணமாக 37 ரூபாயும் நிலை யான கட்டணமாக 550 ரூபாயும் நிர்ண யிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, 0 - 60, 61 -90 அலகுகளுக்கு வலு கட்டணமாக 42 ரூபாயாகவும் நிலையான கட்டணமாக 650 ரூபாயாகவும் உள்ளன. 91 -120, 121 - 180 வரையான அலகுகளுக்கு வலு கட்டணமாக 50 ரூபாயாகவும் நிலை யான கட்டணமாக 1,500 ரூபாயாகவும் இருக்கும்.

181 அலகுகளுக்கு மேல் வலு கட்ட ணமாக 75 ரூபாயாகவும் நிலையான கட்டணமாக 2,000 ரூபாயாகவும் நிர்ண யிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 4 பொலிஸாருக்கு...

அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

ஹூங்கம பொலிஸ் குற்றப்பிரிவு நிலைய பொறுப்பதிகாரி, ஓய்வுபெற்ற பொலிஸ் கான்ஸ்டபிள், அம்பாந் தோட்டை துறைமுக பொலிஸில் அரச புலனாய்வு சேவைக்காக பணியாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் திஸ்ஸ மஹாராம பொலிஸ் நிலையத்தின் கான்ஸ்டபிளாக இருந்து பணி நீக்கம் செய்யப்பட்டோருக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

குற்றவாளிகள் கடந்த 2005ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதி திஸ்ஸமஹாராமை - தெபரவெவ, மாத்தறவத்தயில் மூன்று திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் கைது நடவ டிக்கையை முன்னெடுத்திருந்தனர். இதன்போது, இரவு 12 மணியளவில் சந்தேகநபரின் வீட்டை சுற்றிவளைத்து, அவரை கைது செய்தனர். பின்னர் அவரை தப்பிச்செல்லுமாறு கூறி துப் பாக்கிச்சூடு நடத்தியமை விசாரணை களில் தெரியவந்திருந்தது.

இந்த துப்பாக்கிச்சூட்டில் தெபர வெவ - மாத்தறவத்தையை சேர்ந்த லொக்கு ஹென்னதிகே அமில மகேஷ் என்பவரே உயிரிழந்தார் என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

# ஐ. எம். எவ்வின் உதவி மார்ச்சுக்குள் கிட்டும்

## ஜனாதிபதி ரணில் நம்பிக்கை

கொழும்பு, பெப். 16

மார்ச் மாதத்துக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி கிடைக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதன்படி இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கை மார்ச் மாதத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என்ற அறிவிப்பை சர்வதேச நாணய நிதியம் வெளியிடும் என்றும் குறிப்பிட்டுள் ளார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை காலை நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது பொருளாதார



ஸ்திரத்தன்மையின் கட்டத்தில் இருப்ப தாகவும் சர்வதேச நாணய நிதியத் தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு, நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் சமூ கத்தில் புதிய அணுகு முறைகள் அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# திருமலை பெற்றோலிய முனைய தலைவராக முன்னாள் தளபதி!



கொழும்பு, பெப். 16

முன்னாள் கடற்படைத் தளபதி அட் மிரல் ரவீந்திர விஜயகுணரத்ன திரு கோணமலை பெற்றோலிய முனையத் தின் தலைவராக நியமிக்கப்பட்டுள் ளார்.

இந்த பதவிக்கு மேலதிகமாக அட்மிரல் ரவீந்திர விஜயகுணரத்ன இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாப னத்தின் முகாமைத்துவ பணிப்பாளராக வும் கடமைகளை பொறுப்பேற்றுள் ளார்.

இந்திய எண்ணெய் நிறுவனம் மற்றும் இலங்கை பெற்றோலிய கூட் டுத்தாபனத்தின் கூட்டு நிறுவனமாக இந்த நிறுவனம் திருகோணமலை எண்ணெய் குதங்களில் வர்த்தக செயல் பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

# டி. ஐ. ஜி. தென்னகோனுக்கான அழைப்பாணை இடைநிறுத்தம்

கொழும்பு, பெப். 16

மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்ன கோனுக்கு கொழும்பு கோட்டை நீதி வான் வழங்கிய அழைப்பாணையை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன் றம் நேற்று இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும், இந்த எழுத்தாணை மனு வின் இறுதி விசாரணை மற்றும் தீர்மா னிக்கப்படும் வரையில் பிரதி பொலிஸ் மா அதிபர் தென்னகோனுக்கு எதிராக கோட்டை நீதிவான் நீதிமன்றில் தொடரப்பட்ட நடவடிக்கைகளுக்கு இடைக்காலத் தடை விதித்தது.

ஜூலை 9 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக்காரர்களால் ஒரு கோடியே 78 இலட்சம் ரூபாய் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில், தேசபந்து தென்னகோனை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு



கோட்டை நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியிருந்தது.

தமக்கு எதிரான நீதிமன்ற விசாரணை மற்றும் அழைப்பாணையை சவாலுக்கு உட்படுத்தி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தென்னகோன் தாக்கல் செய்த எழுத்தாணை மனுவை பரிசீலித்த மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஆர். குருசிங்க ஆகிய இரு நீதியரசர்கள் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (ஐ)

## மின்கட்டண...

நிராகரித்தனர். எனவே, ஆணைக்கு ழுவின் முன்மொழியப்பட்ட கட்டண திருத் தத்தை நடைமுறைப்படுத்த முடியாது என்று ரத்நாயக்க தெரி வித்துள்ளார்.

எது எப்படி இருப்பினும், ஆணைக் குழுவின் மூன்று உறுப்பினர்களும் மின் சார சபையின் கட்டண திருத்தத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளனர். இது பெரும் பான்மையினரின் முடிவாகும். எனினும், இதன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவு எதுவும் இல்லை. இதேசமயம், ஆணைக்குழுவின் உறுப்பி னர்கள் ஊடகங்களுக்கு பகிரங்கமாக கருத்து தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பலரும்...

எஸ்வெர்க்" என்ற சிற்றுண்டிக் கூடத்தில் நேற்று காலை 8.30 மணி யளவில் இந்த கொலை நிகழ்ந்தது.

அந்நாட்டு பொலிஸாரின் தகவலின் படி, கொலையானவர் 47 வயது பெண் ஆவார். இவரை 57 வயதான அவரின் கணவர் கத்தியால் குத்திக் கொன்றார். தகவலறிந்து பொலிஸார் அங்கு சென்ற போது, பாதிக்கப்பட்டவர் இரத்த வெள்ளத்தில் தரையில் கிடந்தார். அவரை காப்பாற்றும் முயற்சிகள் பலன ளிக்கவில்லை. கணவன் எதிர்ப்பின்றி பொலிஸாரிடம் சரணடைந்தார் என்று கூறப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வெடுக்குநாறிமலைக்கு நேற்று அமைச்சர் டக்ளஸ் திடீர் விஜயம்



வவுனியா, பெப். 16

வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வர் ஆலயத்தில் தொடர்ச்சியாக பூசை வழிபாடுகளை மேற்கொள்வது உறுதிப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த பகுதியில் உள்ள தொல்லியல் சின்னங்கள் மற்றும் இயற்கை வளங்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் அனைவரின் செயற்பாடுகள் அமைவது அவசியம் எனவும் தெரிவித்தார்.

பாரம்பரியமாக இந்துக்களினால் வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதி லிங்கேஸ்வர் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பூசை வழிபாடுகளை தொடர்வதற்கு, அரசாங்க திணைக்களங்கள் சிலவற்றின் கடமைசார் செயற்பாடுகள் இடையூறாக அமைந்துள்ள நிலையில், குறித்த பகுதிக்கு நேற்று கண்காணிப்பு பயணம் ஒன்றை மேற்கொண்டபோதே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், குறித்த விடயம் தொடர்பாக பிரதேச மக்களின் கருத்துக்களையும் எதிர்பார்ப்புக்களையும் கேட்டறிந்த அமைச்சர், மக்களின் உணர்வுகளை பாதிக்கும் வகையில் அரசாங்க திணைக்களங்களின் செயற்பாடுகள் அமையுமாயின், அவை தொடர்பாக கரிசனை செலுத்தப்படும் என்று உறுதியளித்தார்.

மேலும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதுடன், துறைசார் அமைச்சர்களுடனும் பிரஸ்தாபித்து சுமூகமான தீர்வு காணப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே வெடுக்குநாறி விவகாரம் தொடர்பாக, தமிழ் மக்களின் பிரச்னைகள் மற்றும் அபிலாஷைகளை தீர்ப்பதற்கான அமைச்சரவை உப குழுவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வினால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அதன்போது, சம்மந்தப்பட்ட பகுதிக்கு நேரடியாக சென்று நிலைமைகளை ஆராய்வதுடன், சம்மந்தப்பட்ட துறைசார் அமைச்சர்களுடன் இணைந்து சுமூகமான தீர்வை காணுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகம் மீது தாக்குதல்



கொழும்பு, பெப். 16

தெமட்டகொடை ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தின் மீது நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பலர் உள்ளே புகுந்து அலுவலகத்தில் இருந்த விளம்பர பலகைகளைக் கடுமையாக சேதப்படுத்தியுள்ளனர் என அந்தக் கட்சியின் முன்னாள் எம்.பி. முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர்களை மிரட்டி அலுவலகங்களை அழிப்பதற்காக குழுக்களை களமிறக்குவதன் மூலம் ஜனாதிபதி புதிய கலாசாரத்தை உருவாக்கியுள்ளதாகவும் முஜிபுர் ரஹ்மான் குற்றம் சுமத்தியுள்ளார். (அ)

## 7 மாவட்டங்களுக்கான தபால் மூல வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டன

கொழும்பு, பெப். 16

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏழு மாவட்டங்களின் தபால் மூல வாக்குச் சீட்டுகள் ஏற்கனவே அச்சடிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சக அதிகாரி கங்கானி கல்பனா லியனகே தெரிவித்துள்ளார்.

நிதி விவகாரம் தொடர்பில் திறைசேரியுடன் கலந்துரை யாடி தீர்வு காணப்படாத தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தமக்கு அறிவித்துள்ளதாக அவர் கூறினார்.

அரசாங்க அச்சகத் திணைக்களத்திற்கு இதுவரை 400 மில்லியன் ரூபா வழங்கப் பட்டுள்ளது.

எனினும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர் பான அச்சுப் பணிகளுக்கு 700 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக அவர் மேலும் கூறினார். (அ)

## தேர்தல் நடத்த கோரி தொடர் போராட்டம்!

### சஜித் அணி வியூகம்

கொழும்பு, பெப். 16

மக்களின் வாக்குரிமையை பாதுகாப்பதற்காகவும், தேர்தலை பிற்போடுவதற்கு அரசு மேற்கொள்ளும் நகர்வுகளுக்கு எதிராகவும் தொடர் போராட்டங்களை நடத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்ற அவசர கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தலை பிற்போடுவதற்கு ஆளுங்கட்சி முயற்சிக்கின்றது என பரவலாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று முன் தினம் நடைபெற்ற சந்திப்பின்போதும், தேர்தல் குறித்து உறுதியான முடிவு எடுக்கப்படவில்லை.

இந்நிலையிலேயே அடுத்த கட்ட நகர்வுகள் பற்றி ஆராய சஜித் இந்த அவசர கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

இதன்போது மக்களை திரட்டி தொடர் போராட்டம் நடத்துவதே சிறந்த வழியென தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய தேர்தலை கோரி போராட்டம் நடத்தும் அழைப்பு ஓரிரு நாட்களுக்குள் விடுக்கப்படவுள்ளது. (அ)

## முஸ்லிம் காங்கிரஸின் மனு நிராகரிப்பு முடிவு நீதிமன்றத்தினால் இடைநிறுத்தம்!

மன்னார், பெப். 16

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் மன்னார் பிரதேச சபைக்கான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட முடிவை, உயர்நீதிமன்றம் நேற்று இடைநிறுத்தியுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தாக்கல் செய்த மனு நீதியரசர்கள் யசந்த கோதாகொட, முர்து பெர்னாண்டோ மற்றும் காமினி அமரசேகர ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதியரசர் கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

முன்னர் வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப்பட்டபோதும், பின்னர் சட்டவிரோதமாக எந்தவொரு காரணமும் தெரிவிக்காமல், சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரியால் வழங்கப்பட்ட கடிதத்தின் மூலம், குறித்த வேட்புமனு நிராகரிக்கப் பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ளது.

எனவே, தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரால் எடுக்கப்பட்ட முடிவை செல்லுபடியாகாத வகையில் நீதிப் பேராணை பிறப்பிக்க வேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நீதிமன்றத்தில் கோரியிருந்தது.

இதன்படி, பெப்ரவரி 21 ஆம் திகதி வரை, நடைமுறையில் இருக்கும் வகையில், இடைக்கால உத்தரவின் மூலம் முஸ்லிம் காங்கிரஸின் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட முடிவை, உயர்நீதிமன்றம் நிறுத்தியது. (அ-6)

## நிதி அமைச்சின் செயலாளர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு!

கொழும்பு, பெப். 16

நிதி அமைச்சின் செயலாளர் தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு அழைக்கப்படவுள்ளார் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு இதுவரை வழங்கப்படாமை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அவர் அழைக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

அதனூடாக தற்போதைய சிக்கல் நிலையை தீர்க்க முடியும் என தாம் நம்புவதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறினார்.

இதனிடையே, அரச அச்சகருடனும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது.

அரசியலமைப்புக்கு உட்பட்ட விடயம் என்பதால் வாக்குச்சீட்டுகளை உடனடியாக ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்கான பொறுப்பு தொடர்பில் அரச அச்சகருக்கு விளக்கமளிக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (அ)

## மின்சாரக் கட்டணம் நேற்று முதல் உயர்வு

கொழும்பு, பெப். 16

மின்சாரக் கட்டணத்தை நேற்று முதல் 66 சதவீதமாக அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க இந்த பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்த போதிலும், ஏனைய மூன்று உறுப்பினர்களின் இணக்கப் பாடு காரணமாக பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

இலங்கை மின்சார சபைக்கு 287 பில்லியன் ரூபா மேலதிக வருமானத்தை ஈட்டும் வகையில், 66 வீத மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்குவதற்கான பிரேரணை ஜனவரி 02 ஆம் திகதி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு விற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

எனினும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதி தொடர்ந்து மறுக்கப்பட்டதுடன், கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் அதன் உறுப்பினர்கள் பலர் ராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பஸிலின் சொத்து பட்டியல் விரைவில் வெளியிடப்படும்

### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



கொழும்பு, பெப். 16

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவின் அமெரிக்க சொத்து பட்டியல் விரைவில் வெளியிடப்படும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், தமது அணி இனி மொட்டு கட்சியிடம் சரணடையாது எனவும் அவர் சூளுரைத்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.